இது ரகசியம் அல்ல!

தமிழர் அரசியல் எப்போதும் சிக்கல்தாம் போலும்.
இங்கு வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எந் நேரமும் புகைச்சல். இந்தக் கூட்டமைப்பின் நிலைமை 'வியட்நாம் வீடு' என்ற மாதிரி என்றால், தெற்கிலும் மத்திய மாகாணத்தி லும் மலையகத் பக்கம் 03

பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆவணி 05 செவ்வாய்க்கிழமை 21.08.2018 | கதிர் 289

# தெற்கின் ஆதிக்கம் வடக்கில் நீடிப்பின் எக்காலத்திலும் கிட்டாது நல்லிணக்கம்

## வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் முதலமைச்சர் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 21

வடக்கு - கிழக்கைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தெற்கிலுள்ளவர்கள் நடந்து கொள்வார்களாயின் எங்களால் எந்தக் காலத்திலும் நல்லெண்ணைத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியாது.

- இவ்வாறு தம்மைச் சந்தித்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் நேற்று எடுத்துரைத்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன். பக்கம் 14



## விஜயகலாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம்


### சபாநாயகருக்கு சட்டமா அதிபர் பரிந்துரை

கொழும்பு, ஓக.21

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மீது நாடாளுமன்ற நிலையியல் கட்டளை விதிகளின் அடிப்படையில் சபாநாயகர் நடவடிக்கை எடுக்க முடியும் என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. பக்கம் 14

## பிரதேச செயலருக்கு எதிராக இலஞ்ச ஊழல் முறைப்பாடு

### ஆணைக்குழு அலுவலகத்துக்கு நேரில் சென்று சமர்ப்பித்தார் வடமாகாண சபை உறுப்பினர்



வவுனியா, ஓக.21

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமனுக்கு எதிரான 55 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஆவணங்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் நேற்று காலை கொழும்பில் அமைந் பக்கம் 14

## மருத்துவருக்கு அச்சுறுத்தல்; எதிர்த்து நேற்று கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், ஓக.21

கொக்குவில் பகுதியில் வசிக்கும் மருத்துவர் ஒருவரை அச்சுறுத்தும் வகையில் அவரது வீடு பக்கம் 14

## மன்னார் புதைகுழி அகழ்வு நேற்று மீண்டும் ஆரம்பம்

மன்னார், ஓக.21

மன்னார் சதொச வளாகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை மீண்டும் மனித எலும்புக்கூடுகளைத் தேடும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 10 ஆம் திகதி மாலை பக்கம் 14

## நிர்மாண வேலைகளை மதிப்பிட்டு அறிக்கை பெற நிபுணத்துவக் குழு

### யாழ். மாநகர சபையில் தீர்மானம்!

யாழ்ப்பாணம், ஓக.21

யாழ். மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன் அந்தந்தத் துறைசார் பக்கம் 14

## நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பதற்கு மஹிந்த அணி எதிர்ப்பு

கொழும்பு, ஓக.21

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் பக்கம் 14

## ஐந்து சந்திக் கேக் கடை 3ஆம் முறை முற்றுகை

### மாவா விற்றவர் என ஒருவர் கைது



யாழ்ப்பாணம், ஓக.21

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் இயங்கிவரும் கேக் பக்கம் 03

## முன்னாள் போராளிகளில் பலர் இராணுவத்துடன் செயற்படுகின்றனர்

### வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் முதலமைச்சர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக.21

தடுப்பிலிருந்தபோது எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய முன்னாள் போராளிகள் பலர், இராணுவத்தினருடன் இணைந்து செயற்படுகின்றனர். தற்போதும் இந்த நிலை நீடிக்கிறது. அந்தப் பக்கம் 14

## தேர்தல் தாமதமடைவதற்கு அரசுதான் முழுப் பொறுப்பு

### மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு, ஓக.21

மாகாண சபைத் தேர்தல் தாமதமடைவது தொடர்பில் தற்போதைய நல்லாட்சி அரசே பொறுப்புக் கூற வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை தனியார் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட பக்கம் 14

## மாகாண அரசின் அசமந்தப் போக்கினால் 3,009 வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை

### முதல்வர் மீது குற்றச்சாட்டுகளைப் பொழிகிறார் தவராசா



யாழ்ப்பாணம், ஓக.21

3,009 வெற்றிடங்கள் நேரடியாக வடக்கு மாகாண சபையினால் நிரப்பப்பட வேண்டியவை. துறைசார் திணைக்களங்களுக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் தயாரிக்கப்படாமையாலும், மாகாண சபையின் அசமந்தப் போக்கினாலும் இவை நிரப்பப்படவில்லை.

- இவ்வாறு பகிரங்கக் பக்கம் 03

# கிளிநொச்சியில் விகாரைகள் கட்டும் திட்டம்: குற்றச்சாட்டை மறுக்கிறார் வடக்கு ஆளுநர்



கொழும்பு, ஓக. 21

வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் முடிவுக்கு வந்த பின்னர், கிளிநொச்சியில் இரண்டு விகாரைகளைக் கட்டுவதற்கு ஆளுநர் திட்டமிட்டுள்ளார் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறிய குற்றச்சாட்டை வட மாகாண ஆளுனர் றெஜினோல்ட் குரே மறுத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் முடிந்த பின்னர், கிளிநொச்சியை சிங்கள பௌத்த மயப்படுத்த ஆளுநர் திட்டமிட்டுள்ளார் என்றும் இரண்டு விகாரைகளைக் கட்டுவதற்கு ஆளுநர் செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அண்மையில் கூறியிருந்தார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள வட மாகாண ஆளுனர் றெஜினோல்ட் குரே, விகாரைகள் கட்டப்படவுள்ளது எனக் குற்றம்சாட்டியுள்ள முதலமைச்சர் விக்னேஸ்வரன், அவை எந்த இடத்தில் கட்டப்படவுள்ளன என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்றும் சவால் விடுத்துள்ளார்.

# ஆஸி. கூட்டுப் பயிற்சியில் இலங்கைக் கடற்படையினர்



ஆஸ்திரேலியக் கடற்படையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள ககாடு கூட்டு கடற்படைப் பயிற்சியில் இலங்கைக் கடற்படையும் பங்கேற்கவுள்ளது.

ஆஸ்திரேலியாவின் டார்வின் துறைமுகத்துக்கு அப்பால் ககாடு (KAKADU) என்ற பெயரிலான 14 ஆவது கூட்டு கடற்பயிற்சியை ஆஸ்திரேலியக் கடற்படை நடத்தவுள்ளது.

எதிர்வரும், ஓகஸ்ட் 30 ஆம் திகதி தொடங்கும் இந்தக் கூட்டுப் பயிற்சி செப்ரெம்பர் 15 ஆம் திகதி வரை இரண்டு வாரங்கள் நடைபெறவுள்ளது.

இதில், 26 நாடுகளைச் சேர்ந்த 24 போர்க்கப்பல்கள், 21 விமானங்கள், 2000 படையினர் பங்கேற்கவுள்ளனர்.

இந்தக் கூட்டுப் பயிற்சியில் இலங்கைக் கடற்படையும் பங்கேற்கவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஆஸ்திரேலியாவில் நடைபெறும் இந்தக் கூட்டுப் பயிற்சிக்கு முதல்முறையாக சீனக் கடற்படை போர்க்கப்பல் ஒன்றும் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் விடுதியிலிருந்து சடலம் மீட்பு

வவுனியா பஜார் வீதியில் அமைந்துள்ள விடுதியொன்றிலிருந்து நேற்றுக் காலை வயோதிபர் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வவுனியா பொலிஸ் நிலையத்திற்குப் பின்புறமாக பஜார் வீதியில் அமைந்துள்ள விடுதியொன்றில் யாழ்ப்பாணம் வேலணைப் பகுதியைச் சேர்ந்த 71 வயதுடைய வேலன் கந்தசாமி என்ற வயோதிபரின் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த நபர் நேற்று அதிகாலையிலையே விடுதியில் வந்து தங்கியிருந்துள்ளார். காலை 10.30 மணியளவில் விடுதி ஊழியர் சென்று பார்த்த போது, அவர் இறந்த நிலையில் இருப்பதை அவதானித்து வவுனியா பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (சு - 100)

## அம்பாந்தோட்டையை வசப்படுத்தியது சீனாவின் இராணுவ மூலோபாயம்!

### பென்டகன் தகவல்

சீனா தனது இராணுவ மூலோபாயத்தின் ஒரு அங்கமாகவே அம்பாந்தோட்டைத்துறைமுகத்தை வசப்படுத்தியுள்ளது என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சான பென்டகனின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரஸுக்கு, இராணுவ மற்றும் பாதுகாப்பு முன்னேற்றங்கள் தொடர்பாக பென்டகன் சமர்ப்பித்துள்ள ஆண்டு அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் டிஜிபோட்டியில் சீனா தனது இராணுவத் தளம் ஒன்றை அமைத்த சில மாதங்களில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வசப்படுத்தியுள்ளது.

சீனாவின் பாதை மற்றும் அணைத் திட்டம், பீஜிங்கின் நலனுக்காக ஏனைய நாடுகளின் நலன்களை வடிவமைக்கும் நோக்கம் கொண்டது.

இந்தத் திட்டங்கள் சீனாவின் மூலதனத்தைச் சார்ந்திருக்கும் நிலையை இந்த நாடுகளுக்கு ஏற்படுத்தக் கூடும்.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் இதற்கு உதாரணம்.

கடனுக்குப் பதிலாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன அரசு நிறுவனம் குத்தகைக்குப் பெற்றிருக்கிறது என்றும் பென்டகன் கடந்த வாரம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுடன் பிரதமர் ரணில் தொலைபேசியில் பேச்சு!

பாகிஸ்தான் பிரதமராகப் பதவியேற்றுள்ள இம்ரான் கானுடன், பிரதமர் ரணில் விக்ரமசிங்க தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

நேற்று முன்தினம் தொலைபேசி மூலம், தொடர்பு கொண்ட பிரதமர் ரணில் பாகிஸ்தான் பிரதமராகப் பதவியேற்றுள்ளமைக்கு இம்ரான் கானுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இந்த தொலைபேசி உரையாடலின் போது, இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும், பரஸ்பர நலன்கள் சார்ந்த விடயங்களில் இரு நாடுகளும் இணைந்து பணியாற்றுவது அவசியம் என்றும் பிரதமர் ரணில் வலியுறுத்தியுள்ளார்.

தமக்கு வாழ்த்துத் தெரிவித்த பிரதமர் ரணிலுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்ட பாகிஸ்தான் பிரதமர், இரண்டு நாடுகளும் பலமான நட்புறவைக் கொண்டுள்ளன என்றும் அரசியல், பொருளாதார, பாதுகாப்பு மற்றும் சுற்றுலா உட்பட அனைத்துத் துறைகளிலும் இருதரப்பு உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையினதும் அதன் மக்களதும், தொடர் முன்னேற்றங்களுக்கும் இம்ரான் கான் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாகிஸ்தான் பிரதமராகப் பதவியேற்ற இம்ரான் கானுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தார்.

இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவும் தனது கீச்சகப் பக்கத்தில் இம்ரான் கானுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

## தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட கிளைக்குப் புதிய நிர்வாகிகள் தெரிவு!

தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட குழுக் கூட்டம் மாகாண சபை உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது மாவட்ட புதிய கிளை அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன்படி, கட்சியின் வவுனியா மாவட்ட தலைவராக மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதுடன், மாவட்ட அமைப்பாளராக ந.கருணாநிதியும் செயலாளராக வி.முத்துராசா, பொருளாளராகது.தேவராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன்போது உபதலைவர், இரண்டு துணைத் தலைவர்கள், மகளிர் அணி, இளைஞர் அணி என 27 பேரை உள்ளடக்கிய புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சு - 100)

## கூரை மீது ஏறி பெண் கைதிகள் நேற்று மீண்டும் போராட்டம்

கொழும்பு, ஓக. 21

பெண் கைதிகள் சிலர் சிறைச்சாலையில் கூரை மீது ஏறிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள பெண் கைதிகள் சிலரே இவ்வாறு கூரை மீது ஏறி நேற்று பிற்பகல் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னரும் வெலிக்கடை சிறைச்சாலையில் பெண் கைதிகள் இவ்வாறு கூரையின் மீது ஏறிப் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாற்றுத் திறனாளியின் அழககம் தாக்கப்பட்டமை காட்டு மிராண்டிகளின் இரக்கமற்ற ஈனச் செயல்!

### வவுனியா மாவட்ட அழககக் கூட்டுறவுச் சங்கம் கண்டனம்

முல்லைத்தீவு, ஓக. 21

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நகர்ப்பகுதியில் - துணுக்காய் வீதியில் மாற்றுத் திறனாளி நடத்திய சிகை அலங்கார நிலையம் சேதமாக்கப்பட்டமையானது, மனிதநேயம் இல்லாத காட்டு மிராண்டிகளின் இரக்கமற்ற செயலாகும். இதனை வவுனியா மாவட்ட அழககக் கூட்டுறவுச் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட அழககக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் விவேகானந்தன் அருண் மற்றும் செயலாளர் ஜேசுதாசன் ஜெகராஜா ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

துணுக்காய் வீதியில் மாற்றுத்திறனாளி நடத்தி வந்த சிகை அலங்கார நிலையத்திற்குள் கடந்த 12 ஆம் திகதி நள்ளிரவு கடையின் பின் கதவை உடைத்து உள்நுழைந்து விசமிகள் கண்ணாடி மற்றும் உட் கண்ணாடிகள் அனைத்தையும் அடித்து நொருக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். இந்த நபர் நீண்ட காலமாக அந்தப் பகுதியில் அழகக நிலையத்தை நடத்தி வருகின்றார்.

மாற்றுத்திறனாளியாக உள்ள இவர் பல்வேறு இடப் பெயர்வுகளைச் சந்தித்தது மட்டுமல்லாது பல மன உளைச்சல்களுக்கும் ஆளான நிலையில் தமது குடும்ப நிலையைக் கவனத்திற்கொண்டு சிரமங்களுக்கு மத்தியில் தொழில் நிலையத்தை நடத்தி வருகின்றார்.

தற்போது அவரது அழககம் தாக்கப்பட்டுள்ளமையால் அவர் மேலும் பொருளாதார ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார். மனிதநேயம் இல்லாத காட்டுமிராண்டிகளின் இவ்வீனச் செயலை எமது வவுனியா மாவட்ட அழககக் கூட்டுறவுச் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது.

அத்தோடு இவ்விடயம் சம்பந்தமாக மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் நிலைய உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைவாக பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தி மாற்றுத் திறனாளியான நிலைய உரிமையாளருக்கு நட்டஈடு பெற்றுக் கொடுப்பதோடு மட்டும் நின்றுவிடாது, வல்லிபுரம் மதிவரனின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி நீதியின் முன் குற்றவாளியை நிறுத்தி தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு -100)

# புனர்வாழ்வு பெற்ற பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள்



கொழும்பு, ஓக.21

புனர்வாழ்வளிக்கப்பட்ட முப்பது பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு நேற்றுப் பிரதமர் தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.

புனர்வாழ்வளிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு அரசதொழில் வாய்ப்புக்களை வழங்குவது தொடர்பில், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் யோசனைக்கு, அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தமைக்கு அமைய, இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நியமனங்களைப் பெற்றுக்கொண்ட பட்டதாரிகள், அமைச்சர் சுவாமிநாதனின் அலுவலகத்தில் அமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடியமையுடன், நன்றியையும் தெரிவித்தனர். (ஐ)

# பலாலி விமானத்தள அபிவிருத்தி பற்றி ஆராய இந்திய அதிகாரிகள் இன்று நேரில் வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஓக.21

பலாலி விமான நிலையத்துக்கு இன்று முற்பகல் 9.30 மணிக்கு வருகை தரும் இந்திய அதிகாரிகள் மூவரும், விமான ஓடுபாதை மற்றும் விமான நிலைய அமைவிடம் என்பன தொடர்பில் ஆராய்ந்து பிற்பகலே கொழும்பு திரும்புவர் என விமானப் படைத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக சீரமைக்க இலங்கை – இந்திய அரசுகளுக்கு இடையே இணக்கம் காணப்பட்டது.

அத்துடன், பலாலியிலிருந்து தமிழகத்துக்கான விமான சேவையை ஆரம்பிக்கவும் இந்தியா இலங்கையிடம் விருப்பம் தெரிவித்தது.

இந்த நிலையில் பலாலி விமானத் தளத்தைப் பிராந்திய விமான நிலையமாக விரிவாக்கும் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்க இந்தியா தயாராகி உள்ளது. அதனை யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதுவர், கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் பலாலி விமானத்தளத்தை நேரில் ஆராய இந்திய அதிகாரிகள் மூவர் இன்று பலாலிக்கு வருகை தருகின்றனர்.

இதேவேளை, 2016ஆம் ஆண்டும் இந்திய சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரிகள் பலாலிக்கு நேரில் வருகை தந்து ஆராய்ந்தனர்.

அதன்போது, தற்போதுள்ள நிலப்பரப்பை வைத்தே பிராந்திய விமான நிலையம் அமைக்க முடியும் என்றும், மேலதிகமாக காணிகளை சுவீகரிக்கத் தேவையில்லை என்றும், அவர்கள் அறிக்கை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களை அதிகம் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் முற்போக்குக் கூட்டணி' என்ற கூட்டமைப்பிலோ இந்தோனேஷியப் பூகம்ப நிலைவரம்.

எந்த நேரமும் பூகம்பமும் எரிமலையும் வெடிக்கலாம் என்ற அளவில் அந்தக் கூட்ட மைப்புக்குள் வெளியே தெரியாமல் கருத்து முரண்பாடு முற்றியிருப்பதாகத் தகவல்.

மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி, திகாம்பரத்தின் தொழிலாளர் தேசிய காங் கிரஸ், இராதாகிருஷ்ணனின் மலையக மக்கள் முன்னணி ஆகியன ஒன்று சேர்ந்து, இந்த 'தமிழ் முற்போக்குக் கூட்டணியை' ஸ்தாபித்து, கடந்த பொதுத் தேர்தலை ஒன்றாக எதிர்கொண்டன. அதன் மூலம் தங்களின் பொது எதிரியான இ.தொ.காவை வீழ்த்தி ஆறு எம்.பி. பதவிகளைக் கூட்டணி வென்றது. இ.தொ.காவில் தொண்டமானும், முத்து சிவலிங்கமும் மாத்திரமே தெரிவானார்கள்.

இந்த வெற்றியின் மூலம் மனோவும், திகாம்பரமும் அமைச்சர்களானார்கள். இராதாகிருஷ்ணன் இராஜாங்க அமைச்சரானார்.

இப்போது இந்த முத்தரப்புக்கு இடையே வெளியில் புலப்படாத முரண்பாடு உச்சத்தை எட்டிவிட்டது. வெளியில் தெரியாமல் பெரும் பூகம்பம் – எரிமலை – வெடித்துக் குழம்பைக் கக்க அடியில் தயாராகிக் கொண்டிருக்கின்றது என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

இந்த அணியைச் சேர்ந்த கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணனுக்கு பிரிட்டனின் பல்கலைக்கழகம் ஒன்று அவரின் கல்வித்துறைச் சேவையை கௌரவிக்கும் முகமாக கலாநிதிப் பட்டமளித்துப் பாராட்டியது.

பிரிட்டன் பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதி பட்டம் பெற்ற இராதாகிருஷ்ணனைப் பாராட்டி அண்மையில் ஹட்டனில் ஒரு விழா அவரது ஆதரவாளர்களினால் எடுக்கப்பட்டது.

ஆனால், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் எல்லோரும் – அமைச்சர்கள் மனோ கணேசன், திகாம்பரம் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் – அந்நிகழ்வில் மிஸ்ஸிங். அந்த நிகழ்வில் பங்குபற்ற புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த கூட்டணி யின் மற்றொரு எம்.பியையும் அவரின் கட்சித் தலைவர் தொலைபேசி மூலம் பேசித் திட்டி, நிகழ்ச்சிக்குச் செல்லவிடாமல் தடுத்து விட்டார். என்றும் தகவல்.

ஆனால், எதிர்த்தரப்பில் இ.தொ.காவின் எம்.பியான முத்து சிவலிங்கம் அந்த நிகழ்வில் பங்குபற்றி இராதாக் கிருஷ்னை வாழ்த்தினார்.

கூட்டணியின் உட்பூசல் விரைவில் பகிரங்கமாக அம்பலமாகும் என்றும், ஒரு தலைவர் விரைவில் தமது கட்சியுடன் கூட்டணியில் இருந்து பகிரங்கமாக அறிவித்து விட்டு வெளியேறும் சூழ்நிலை காணப்படுவதாகவும் அறிய முடிந்தது.

தமிழர் தரப்பில் 'கூட்டணி' என்று ஒன்று கூடினாலேயே அது 'கூத்தணி' என்றாகி விடும் என்பதுதானே தலையெழுத்து...?

இந்த வகையில் பார்த்தால் 'கூட்டமைப்பு' என்பதும் 'கூத்தமைப்பு' போலத்தானே இருக்கின்றது? - மின்னல் -

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கேள்வி – பதில் அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:–

கேள்வி: தேர்தலை இலக்கு வைத்தே மாகாண சபை மீதான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன என முதலமைச்சர் தெரிவித்துள்ளார். நீங்கள் தான் மாகாண சபை மீதான பல குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர் என்ற வகையில் இது தொடர்பில் தங்கள் கருத்து என்ன?

பதில்: மாகாண சபையின் வினைத்திறன் அற்ற செயற்பாடுகளை நான் 2014 முதல் தொடர்ச்சியாக எடுத்துக் கூறி வருகின்றேன். அரசமைப்பு ரீதியாக மாகாண சபைக்குரிய முக்கிய வகிபாகம் நிறைவேற்று செயற்பாட்டிற்குப் பொறுப்பாக இருக்கும் முதலமைச்சரும் அமைச்சரவையும் மாகாண சபைக்குப் பொறுப்பு கூறல் வேண்டும் என்பதாகும்.

இதன் அடிப்படையில் சபையில் என்னால் கேட்கப்படும் கேள்விகளுக்கு முதலமைச்சரோ, அமைச்சர்களோ பொறுப்பாகப் பதில் வழங்குவது கிடையாது. இந்த நிலையில் மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்ற முறையில் மாகாண சபையின் வினைத்திறன் அற்ற செயற்பாடுகளை ஊடகங்கள் வாயிலாக மக்களிற்குத் தெரிவிக்கவேண்டியது எனது கடமையெனக் கருதி செயற்படுகின்றேன். இதனைத் தேர்தலை நோக்காகக் கொண்டது எனக் கூற முனைவது இயலாத் தன்மையை மூடி மறைப்பதற்கான வர்ணம்.

டெனிஸ்வரனால் மேன்முறையீட்டு நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் இடைக்காலத் தடை பிறப்பித்த நாள் முதல் முதலமைச்சர் வழமைபோல் தொடர்ச்சியாக வழக்கின் கட்டளை தொடர்பில் பொய்யான தகவல்களை ஊடகங்களின் கேள்விகளுக்குப் பதில் என்ற போர்வையில் தானே கேள்வி கேட்டுப் பரப்புரை செய்துள்ளார். பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் உண்மையை மக்களுக்குத் தெரியப்படுத்தவே இந்த வழக்கின் உண்மை விவரத்தைப் பகிரங்கப்படுத்தினேன்.

வடக்கு மாகாண சபையில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பில் கூட முதலமைச்சர் உண்மையை உரைக்கவில்லை. இதில் முக்கிய விடயம் இந்த வெற்றிடத்தை யார் நிரப்புவது, எவ்வாறு நிரப்புவது என்பது அல்ல. மாறாக இவற்றினை நிரப்புவதற்கு மாகாண சபை எடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் என்ன என்பதே ஆகும். எனது இக்கூற்றின் நியாயத் தன்மையை இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண சபையினால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை என இது தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை நிரூபிக்கின்றதாக அமைகின்றது.

உத்தியோகபூர்வதகவல்களின் அடிப்படையில் 30.06.2018 அன்று பாடசாலைகள் தவிர்ந்த வடக்கு மாகாண சபையின் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களாவன:– சிரேஷ்ட நிலை – 590, மூன்றாம் நிலை – 123 இரண்டாம் நிலை – 4,672, ஆரம்ப நிலை – 2,063, சேவை நிலை குறிப்பிடாதவர்கள் – 62 பேர் என மொத்தமாக 7,510 ஆகும்.

2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4,791 ஆக இருந்த இவ் வெற்றிடப் பட்டியல் 2016 டிசெம்பரில் 2,957 ஆகக் குறைந்து இன்று 7,510 ஆக உயர்வடைந்துள்ளது. 2015 டிசெம்பரிலிருந்து 30.06.2018 வரை இரண்டாம் நிலையில் 2,742 நியமனங்களும் ஆரம்ப நிலையில் 189 நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

சிரேஷ்ட நிலை மற்றும் மூன்றாம் நிலை அதிகாரிகள் மற்றும் இரண்டாம் நிலை அலுவலர்களில் சில சேவைகளைச் சேர்ந்தவர்கள். (உ.ம். தாதிகள், துணை மருத்துவ சேவை வகுதியினர்) மத்தியினால் ஆள்சேர்ப்புச் செய்யப்பட வேண்டியவர்கள். இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது மத்தியினால் ஆள்சேர்ப்புச் செய்யப்படல் வேண்டும் என்பதற்காக அவர்கள் செய்யவில்லை என அவர்கள் மேல் குற்றம் சுமத்தி விட்டு நாம் தப்பித்துக் கொள்ள முடியாது. எம் மக்கள் மீது நாம் உண்மையில் அக்கறை கொண்டவர்களாக இருப்பின் இவ் வெற்றிடங்களை நிரப்புமாறு அதற்கான நியாயப்பாடுகளுடன் தொடர்ச்சியான அழுத்தங்களை மத்தியின் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்குக் கொடுத்திருத்தல் வேண்டும். அவ்வாறாக நியாயப்பாடுகளுடனான அழுத்தங்களை முதலமைச்சர் அல்லது ஏனைய அமைச்சர்கள் பிரயோகித்தமைக்கான ஆதாரங்களாகக் கடிதங்களை அல்லது கூட்ட அறிக்கைகளினை அவர்களினால் சமர்ப்பிக்க முடியுமா என வினவ விரும்புகின்றேன்.

சில வெற்றிடங்கள் தகுதியான விண்ணப்பதாரிகள் இன்மை காரணமாக நிரப்பப்படவில்லை என்பதனையும் நியாயபூர்வமான கருத்தாக ஏற்றுக் கொள்ளலாம். இவை தவிர, ஏனைய 3,009 வெற்றிடங்கள் நேரடியாக மாகாண சபையினால் நிரப்பப்பட வேண்டியவை. துறைசார் திணைக்களங்களிற்குரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் தயாரிக்கப்படாமையினாலும், மாகாண சபையின் அசமந்தப் போக்கினாலும் இவை நிரப்பப் படவில்லை. வடக்கு, கிழக்கு ஒன்றாக இருந்து வடக்கு மாகாணம் தனி மாகாணமாக உருவாக்கப்பட்டதன் பின்பு இரண்டாம் நிலை, ஆரம்ப நிலைகளிற்கான சில துறை சார் ஊழியர்களின் சேவைப் பிரமாணக் குறிப்புகளை இன்னும் வடக்கு மாகாணத் திணைக்களங்கள் ஆக்கவில்லை. வடக்குமாகாண சபையின் செயற்திறனின்மையே இதற்குரிய காரணம் – என்றுள்ளது. (ஐ)

## ஐந்து சந்திக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விற்பனை நிலையம் நேற்றுத் திங்கட்கிழமை மூன்றாவது தடவையாகவும் முற்றுகையிடப்பட்டது.

அங்கு முன்னெடுக்கப்பட்ட தேடுதலில் 30 பைக்கெற்றுக்களில் இருந்த ஒரு கிலோ கிராம் மாவா போதைப்பொருள் மீட்கப்பட்டது. அதனை விற்பனைக்காக வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் குடும்பத்தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட இளைஞர்களுக்கு மாவா போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கும் பொலிஸ் பிரிவுக்கு முறைப்பாடுகள் கிடைத்தன.

அவை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சிறப்பு பொலிஸ் பிரிவினரால் யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியிலுள்ள கேக் விற்பனை நிலையம் நேற்று திங்கட்கிழமை முற்றுகையிடப்பட்டது.

இதன்போது முன்னெடுக்கப்பட்ட தேடுதலின்போது, விற்பனைக்குத் தயாராகவிருந்த சுமார் ஒரு கிலோ கிராம் மாவா போதைப் பொருள் பொதிகள் கைப்பற்றப்பட்டன. அவற்றை விற்பனைக்கு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கேக் விற்பனை நிலையத்திலிருந்த 45 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அத்துடன், அவரிடம் மீட்கப்பட்ட மாவா போதைப் பொருளும் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் கூறினர்.

இதேவேளை, ஐந்து சந்தி கேக் விற்பனை நிலையம் கடந்த ஏப்ரல் மாதம் 10ஆம் திகதியும் கடந்த 7ஆம் திகதியும் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது. அதன்போது, பெருமளவு மாவா போதைப்பொருள் கைப்பட்டப்பட்டமையுடன், அதனைத் தயாரிக்கும் மூலப்பொருள்களும் மீட்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், இருவர் கைது செய்யப்பட்டுமிருந்தனர். (ஐ-7)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# எத்தகைய உதவிகள் தேவை?

*'எப்படி இருந்த நீங்கள் இப்படி ஆகி விட்டீர்களே...!'* – என்ற வசனம் தமிழ் சினிமாவில் நடிகர் விவேக் பற்றிய தாகப் பேசப்படும் ஒரு நகைச்சுவை வாக்கியம்.

ஆனால் ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரை – நமது இளைஞர் சமூகத்தைப் பொறுத்த வரை – இன்று அதுவே ஒரு துன்பியல் வாக்கியமாகவும் அமையும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்கின்றது.

ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் உலகையே அதிர வைத்த ஒரு பெரும் விடுதலைப் போராட்டப் படை எழுச்சியை தனது இளைஞர் சமுதாயமாகக் கொண்டிருந்தது நமது தமிழினம்.

தாயக மண்ணின் விடுதலைக்காக நினைத்துப் பார்க்க முடியாத ஒப்பற்ற தியாகங்களையும், மலைக்க வைக்கும் வீர தீரங்களையும் புரிந்த ஓர் இளைஞர் சமுதாயத்தை நாம் கொண்டிருந்தோம்.

நமது இளைஞர் சமூகத்தின் சொற்களில் வர்ணித்து விட முடியாத ஈகங்களையும் எண்ணியே பார்க்க முடியாத தீரச் சாதனைகளையும் கண்டு சர்வதேசமே வியந்து நின்றது.

அப்படியிருந்த நமது இளைஞர் சமூகத்தின் இன்றைய நிலைமைதான் என்ன?

விசனத்துடன் அதனை விவரித்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.

*"எமது இளைஞர், யுவதிகளைத் தமது இயல்பான உயரிய சிந்தனைகளை மேற் கொள்ள விடாது தடுக்கும் நோக்குடன் அவர்களுக்குப் போதைப் பொருள் பாவனை, கலாசாரச் சீரழிவு முறைகள், ஆடம்பர வாழ்க்கை முறைமை, படாடோப மோட்டார் சைக்கிள் பவனி, வாள்வெட்டுக் கலாசாரம், கொலை, களவு போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது."*

– இப்படிச் சுட்டிக்காட்டும் முதலமைச்சர் அப்படி சீரழிவு விடயங்கள் அவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்படுவதற்கான காரணங்களையும் புட்டு வைக்கத் தவறவில்லை.

*"எங்கே எமது இளைஞர்கள் மீண்டும் சுதந்திர தாகம் கொண்டு ஒன்றுபட்டு விடுவார்களோ என்ற பயம் அரசாங்கத்துக்கு இப்பொழுதும் இருக்கின்றது."* – என்று அவர் சுட்டிக் காட்டுவதில், நம் மத்தியில் கலாசாரச் சீரழிவு திட்டமிட்டுப் புதைக்கப்படுவதன் உள்நோக்கம் அமிழ்ந்து கிடப்பதை நாம் உணர முடியும்.

இந்தப் பிரச்சினையில் இருந்து இளைஞர் சமூகத்தை நாம் விடுவிப்பதற்கான சில வழிமுறைகளையும் முதல்வர் எடுத்துரைக்கத் தவறவில்லை.

நமது இளைஞர், யுவதிகளுக்கு நாம் சிந்தனைத் தெளிவை ஏற்படுத்த வேண்டும். தக்க அறிவுரைகளை வழங்க வேண்டும். அவர்களை சோம்பியிருக்க அனுமதிக்காது முழு நேர முயற்சியாளர்களாக அவர்களை மாற்ற வேண்டும்.

அதாவது, நமது இளைஞர் சமுதாயத்தை உற்பத்தியாளர்களாக, புதிய சிந்தனையாளர்களாக நாம் மாற்ற வேண்டும் என்கின்றார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

எமது பிரதேசத்தில் நீடித்த நீண்ட கால யுத்தத்தின் விளைவாக ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகமுமே ஏதோ ஒரு வகையில் பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்பட்டு துன்பச் சுமைகளைச் சுமந்த படி அவலப்படுகிறது.

இந்தத் துன்பச் சுமைகளை நீக்குவதற்காக எமக்குக் கிடைக்கும் வெளி உதவிகள் நம்மை நன் முயற்சியாளர்களாக மேலும் உத்வேகத்துடன் செயற்படுவதற்குத் தூண்டுபவையாக பயன்படுத்தப்பட வேண்டும். அப்படி இல்லாமல் அவை – அந்த உதவிகள் – எமது சமூகத்தை பிறர் ஒத்தாசையில் தங்கி நிற்கும் தரப்புகளாக, எச் சமயத்திலும் உதவிக்குக் கையேந்தி நிற்பவர்களாக மாற்றி விடக் கூடாது என்பதையே முதல்வர் விக்னேஸ்வரன் விசனத்துடன் சுட்டிக் காட்டுகின்றார்.

நமது இளைஞர் சமுதாயம் தமக்குக் கிடைக்கும் உதவிகளை, வாய்ப்புக்களை தான் நுகர்வதற்குப் பயன்படுத்தித் தன்னைச் சோம்பேறி ஆக்கி விடாமல், உழைக்கும் தரப்பாக – ஊக்கத்துடன் செயற்படும் உற்பத்தித் தரப்பாக – தம்மை மாற்றிக் கொள்ளப் பயன்படுத்த வேண்டும்.

கிடைக்கும் உதவிகள் நம்மைக் கட்டிப் போடுபனவாக மாற நாம் அனுமதிக்கக் கூடாது. இதையே *"மற்றவர்களின் உதவியை நாம் எதிர்பார்த்திருப்பது ஈற்றில் எம்மை சோம் பேறிகளாக்கும் அல்லது சோரம்போனவர்களாக்கும்"* என்று எச்சரிக்கின்றார் முதல்வர்.

நமது இளைஞர் சமுதாயமும், அவர்களை வழி நடத்தும் தரப்புகளும் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய – அர்த்தம் நிறைந்த – விடயங்கள் இந்த ஆலோசனைக்குள் புதைந்து கிடக்கின்றன என்பது உண்மை.

# வடக்கு – கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள்: இந்திய – இலங்கை உடன்படிக்கைக்கு முரண்

## ஈ.பி.ஆர்.எல்.எவ். குற்றச்சாட்டு

வவுனியா, ஓக 21

வடக்கு – கிழக்கில் குறிப்பாக முல்லைத்தீவில் முன்னெடுக்கப்பட்டுவரும் சட்டவிரோதத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் இந்திய – இலங்கை ஒப்பந்தத்துக்கு முரணானவை என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் தலைவர் சுரேஷ் க. பிரேமசந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வடக்கு – கிழக்கின் நிலத்தொடர்பைத் துண்டிக்கும் விதமாகச் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. இதில் முக்கியமாக முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் உட்பட்டிருந்த ஏறத்தாழ நாற்பத்தெட்டு கிராமங்களை உள்ளடக்கிய வெலிஓயா பிரதேசத்தை அரசு தமிழ் மக்களிடமிருந்து அடாத்தாகப் பறிப்பதற்கான சூழ்ச்சிகளை மேற்கொண்டது. இந்தப்பிரதேசத்தில் உள்ள கிராமங்களும் வயல்நிலங்களும் மத்தியதரவகுப்பினருக்கானபண்ணைகளுமாக முற்றுமுழுதாக தமிழ் மக்களின் வாழ்விடமாக அவை இருந்து வந்தன.

யுத்த காலத்தில் இங்கிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் விரட்டப்பட்டு ஏதிலிகளாக மாற்றப்பட்டமை மட்டுமல்லாமல் இப்பிரதேசம் முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. அப்போதைய நிர்வாக வசதிக்காக இப்பிரதேசம் அனுராதபுரம் மாவட்டத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குள்ளும் கொண்டு வரப்பட்டது. பின்னர், இந்தச் சமயத்தில் இப்பிரதேசம் மகாவலி அதிகார சபைக்குள் உள்ளீர்க்கப்பட்டு மகாவலி'எல்'வலயம்என்று குறிப்பிடப்பட்டது. அதே நேரம் இப்பிரதேசத்தின் தமிழ்ப் பெயரான மணலாறு என்பது வெலிஓயா என்று சிங்களத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழர்களை விரட்டி ஏதிலியாக்கியவர்கள் சிங்கள மக்களைக் குடியேற்றத் தொடங்கினார்கள். இதில் பல நூறு சிங்கள மக்கள் கிரிமினல் குற்றச்சாட்டிற்கு உள்ளாக்கப்பட்டுச் சிறைத் தண்டனை அனுபவித்துவந்த நிலையில் ஊர் காவல்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டு ஆயுதப் பயிற்சிகள் அளிக்கப்பட்டதன் பின்னர் அப்பிரதேசத்தில் குடியேற்றப்பட்டவர்கள்.

வடக்கு – கிழக்கு இணைந்த தமிழர்களின் தாயகம் என்ற தமிழ் மக்களின் கோரிக்கையை இல்லாமல் செய்வதற்காக வடக்கு – கிழக்கு நிலத் தொடர்பைத் துண்டிப்பதே இவர்களது முக்கிய நோக்கமாக இருந்தது. அதுமட்டுமன்றி, அனுராதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட வடமத்திய மாகாணத்திற்குக் கடலுடனான தொடர்புகளும் தேவை என இதன் மூலம் நியாயப்படுத்தப்பட்டது. இந்தப் பின்னணியில் இராணுவப் பாதுகாப்புடனான சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டமை மட்டுமன்றி, வாழ்க்கையில் மகாவலி நீரே வரமுடியாத பிரதேசத்தை மகாவலி அபிவிருத்திச் சபைக்கு உள்ளிட்ட காணிகள் என அடையாளப்படுத்தியதுடன், கடற்கரை அண்டிய தமிழ் மக்களின் கரவலைப்பாடுகள்கூட இந்த மகாவலி அபிவிருத்திச்சபையின் கீழ் கொண்டுவரக்கூடிய கேவலமான நிலையும் அரங்கேறியது.

வடக்கு– கிழக்கின் நிலத் தொடர்பைத் துண்டிக்கும் இவர்களின் வேலைத்திட்டம் யுத்தகாலத்தில் பின்தள்ளப்பட்டிருந்தது. ஆனால் யுத்தம் முடிந்த பின்னர், தமிழ் மக்களிடமிருந்து பறித்தெடுத்த காணிகளை நிரந்தரமாகச் சிங்கள மக்களுக்கு வழங்கியது மாத்திரமல்லாமல், அதற்கான உறுதிகளையும் முன்னைநாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு வழங்கினார். இந்த நிலையில் தற்போது ஆட்சியிலுள்ள நல்லாட்சி அரசு என்று சொல்லக்கூடியமைத்திரி–ரணில் கூட்டு அரசு இதே நிகழ்ச்சி நிரலைத் தொடர்ந்தும் முன்னெடுத்துவருவதை நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. நாயாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கிய 2500க்கும் ஹெக்ரேயருக்கும் மேற்பட்ட காணிகளை மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குக் கொண்டுசெல்வதன் மூலம் அங்குள்ள தமிழ் மக்களை விரட்டியடித்து, சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை இவ்வரசும் மேற்கொண்டு வருகிறது.

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் சிங்கள மீனவர்களை அங்கு தொடர்ச்சியாக வைத்திருப்பதற்கான அரச உதவிகளும் இராணுவ ஆதரவுகளும் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றன. இதேபோல் அந்த மக்களுக்கான குடியிருப்புக் காணிகளை வழங்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிதாக பௌத்த ஆலயங்களும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. பதினாறு கிராம சேவகர் பிரிவுடன் ஒரு புதிய பிரதேச செயலாளர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இது தற்போதைய முல்லைத்தீவு மாவட்ட குடிசனப் பரம்பலிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய செயற்பாடுகள் இவ்வளவு தூரம் நடைபெற்றும்கூட, சட்டவிரோதமான இந்த வேலைத்திட்டங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு நல்லாட்சி அரசுடன் இணக்க அரசியலில் ஈடுபட்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் என்ற வினா அனைவரிடமும் எழுந்துள்ளது. மக்கள் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் இருப்பையே கேள்விக்குட்படுத்தும் அரசின் இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் நாடாளுமன்றத்தினூடாகவும், சர்வதேச சமூகத்தினூடாகவும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பும் கடமையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உண்டு.

அதுமட்டுமன்றி, தமிழ் மக்களின் இருப்பைக் காப்பாற்றுவதற்காக இந்திய – இலங்கை ஒப்பந்தத்தினூடு வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு அது ஒரு மாகாணம் என்ற அந்தஸ்தையும் எட்டியது. இந்திய– இலங்கை ஒப்பந்தத்தின் அறிமுக உரையிலேயே 'வடக்கு – கிழக்கு என்பது தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடம்' என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆனால், இன்று இத்தகைய சட்டவிரோத சிங்களக் குடியேற்றத்தினூடாக வடக்கு – கிழக்கு நிலத்தொடர்பைத் துண்டிக்கும் விடயம் என்பது இந்திய – இலங்கை ஒப்பந்தத்திற்கும் விரோதமான ஒரு செயற்பாடாகும். ஆகவே, இவ்வாறான செயற்பாடுகளை இந்திய அரசு கண்டிப்பது மட்டுமன்றி, அதனைத் தடுத்து நிறுத்தவும் முன்வரவேண்டும் – என்றுள்ளது. (ஐ – 100)

# எரிக்கப்பட்ட வாடிகளுக்கு இழப்பீடு பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிப்பேன்

## மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஓக 21

நாயாற்றில் தமிழ் மக்களின் வாடிகள் எரிக்கப்பட்டமைக்கான இழப்பீட்டை அரசு வழங்கவேண்டும். அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளை நான் தொடர்ந்து எடுப்பேன் என வட மாகாண சபை உறுப்பினர்து.ரவிகரன் தெரிவித்தார்.

நாயாற்றில் எரியூட்டப்பட்ட வாடிகளின் உரிமையாளர்களுக்கு யாழ். வணிகர் கழகத்தால் உலர் உணவுப் பொருள்கள் மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் ஊடாக வழங்கப்பட்டன.

இது குறித்து ரவிகரன் தெரிவிக்கையில் –

நாயாற்றில் மக்கள் வாடிகள் எரிக்கப்பட்டமையைக் கேள்விப்பட்ட யாம். வணிகர் கழகத்தினர் மாகாணசபை உறுப்பினர் ஜெயசேகரம் ஊடாக என்னோடு தொடர்பு கொண்டு இந்த மக்களுக்காக சிறியளவிலான உணவுப்பொருள்கள் சேகரித்து வைத்துள்ளோம் என்று கூறி அதனை மக்களுக்கு வழங்குமாறு தெரிவித்தனர்.

இதற்கமைய இந்த மக்களுக்கான உதவிப்பொருள்களை எடுத்துவந்து கொடுத்துள்ளோம். மீனவர்களுக்கு ஏற்பட்ட அழிவு சம்பந்தப்பட்டவர்களுக்குப் போய் சேர்வதற்கான ஒழுங்கு முறை இருக்கின்றது. இந்த அழிவுக்கான நட்டஈடுகள் கிடைப்பதற்கான முயற்சிகளில் நான் தொடர்ந்தும் ஈடுபடுவேன் – என்றார். (ஐ)

## நாளை

22.08.2018
புதன்கிழமை

நட்சத்திரம் : பூராடம் முழுவதும்
திதி : ஏகாதசி மு.ப 9.59 வரை
சுபநேரம் : 4.35 – 6.05 வரை
இராகுகாலம் : 12.05 – 1.35 வரை

# நுண்கடன் பிரச்சினை காரணமாக பல உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன!

## மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் தெரிவிப்பு





நுண்கடன் பிரச்சினை காரணமாகப் பல உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என மண் முனை வடக்கு பிரதேச செயலாளர் மா.தயா பரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுகபோக வாழ்வை அனு பவிக்க வேண்டும் என்பதற்காகச் சிலர் இவ் வாறான சிக்கல்களுக்குள் மாட்டிக்கொள் கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதி காரி பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் நுளம்பு பெருகுவதை தடுக்கும் வகையில் கிணறு களை மூடுவதற்கான வலைகள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை கல்லடி, வேலூர் பல்தேவை கட்டடத்தில் நடைபெற் றுள்ளது.

மட்டக்களப்பு – கல்லடி, வேலூரில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் ஏனைய பொது அமைப்புகள் இணைந்து இந்த வலைகளை மக்களுக்கு வழங்கியுள்ளன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப் பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித் தலை வருமாறு–

நாங்கள் எமது பகுதியைச் சுத்தமாக வைத்திருப்பதன் ஊடாக டெங்கு நோய் ஏற்படுவதை தடுக்க முடியும். டெங்கு தொடர் பான பொதுவானச் சிரமதானப் பணிகளில் அனைவரும் பங்குபற்ற வேண்டும்.

அத்துடன் டெங்கு நோயைத் தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் சிரமதானத் தில் சமுர்த்திப் பயனாளிகள் தங்களது பங் களிப்பை வழங்க வேண்டும். அவ்வாறு பங்குபற்றாதவர்களின் சமுர்த்தி உதவியை இடை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

டெங்கு நோயின் தாக்கத்தைக் கட்டுப் படுத்துவதற்கான முழுப் பொறுப்பையும் சமூகமே எடுக்க வேண்டும். வெறுமனே அதிகாரிகள் மீது மட்டும் குற்றம் சுமத்துவதி னால் டெங்கு நுளம்புகள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது.

இதேவேளைத் தற்காலத்தில் நுண்கடன் பிரச்சினைகளால் பல உயிரிழப்புகள் ஏற் படுகின்றன. நாங்கள் இந்த நுண்கடன் பிரச் சினைக்கு வெறுமனே நுண்கடன் வழங்கு பவர்களை மட்டும் குற்றம் சுமத்த முடியாது.

நுண்கடனை பெறாவிட்டால் நுண்கடன் நிறுவனங்கள் கடன் வழங்காது அவர்கள் கடனை திணிப்பதில்லை. நாங்களே அவர்க ளிடம் இருந்து கடனைப் பெற்றுக் கொள்கின் றோம்.

சுகபோக வாழ்வினை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக சிலர் இவ்வாறான சிக்கல்களுக்குள் சிக்குகின்றனர். கடன் களை பெற்று அவற்றினை வீண்விரயம் செய்வதனாலேயே இந்தப் பிரச்சினை ஏற்படுகின்றது.– என அவர் குறிப்பிட்டுள் ளார்.

### நல்லூர் தெய்வீக இசையரங்கில் இன்று இரு இசைக் கச்சேரிகள்

நல்லூர், ஒக.20

இலங்கை இளங்கலை ஞர் மன்றம் நல்லூர் முரு கன் உற்சவ காலத்தை யொட்டி, தெல்லிப் பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனு சரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மண்டப த்தில் நடத்திவரும் தெய் வீக இசையரங்கில் இன்று மாலை 6.45 8.15 வரை இரு இசைக் கச்சேரிகள் இடம்பெ றும்.

முதலாவது வயலின் இசைக் கச்சேரியில் வய லின் - பத்மநாதன் சியா மகிருஷ்ணா, மிருதங் கம் - வ.ரமணா, கடம்- கு.ரவிசங்கர், முகர்சிங்- க.நந்தகுமார்.

அடுத்த இசைக் கச் சேரியின் பாட்டு - ஜெக தீஸ்வரன் மதுரசிகன், வயலின் - கே.வேல தீபன், மிருதங்கம் - ஞா.வசந், கெஞ்சிரா - எஸ்.சண்முகப் பிரியன்.

## இத்தாலியில் வசித்த இலங்கையர் மர்மமான முறையில் உயிரிழப்பு!





இத்தாலியில் தொழிலில் ஈடுபட்ட இலங்கையர் ஒருவர் மர்மமான முறை யில் உயிரிழந்துள்ளார் என அந்த நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

வென்னப்புவ பகுதியை சேர்ந்த 52 வயதான மெரில் சாந்தி என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 18ஆம் திகதி இரத்த காயத் துடன் நாப்பொலி நகர வீதியில் விழுந்து கிடந்த நிலையில் அவர் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை யின் பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 25 வருடங்களாக இத்தாலியில் தொழில் செய்து வந்துள் ளார். இத்தாலியில் அவர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வசித்து வரு கின்றார்.

விபத்து காரணமாக அவர் உயிரிழந் தாரா அல்லது யாரும் திட்டமிட்டுக் கொலை செய்தனர் என்பது தொடர்பில் இத்தாலியப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

நாப்பொலி நகரத்தில் பல்வேறு நாசகார கும்பல்கள் இயங்குகின்றன. இத்தாலியில் வாழும் வெளிநாட்டவர்கள் இந்தக் கும்பலின் தாக்குதலுக்கு உள்ளாகும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இந்த இலங்கையரும் அந்தக் குடும்பலின் தாக்குதலுக்கு உள் ளாகியிருக்கலாம் எனப் பொலிஸார் சந் தேகம் வெளியிட்டுள்ளனர்.

## அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு ஒரு கோடி 40 லட்சம் ரூபா வருமானம்!

கடந்த ஆட்சிக் காலத்தில் 250 கோடி ரூபா வருடாந்த நட்டத்தைப் பெற்ற அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் 2016 ஆம் ஆண்டில் ஒரு கோடி 40 லட்சம் ரூபா வருமானத்தை ஈட்டியது எனக் கூட் டுத்தாபனத்தின் தலைவர் திலக் மஹா நாம தெரிவித்துள்ளார்.

கூட்டுத்தாபனம் புதிய தேயிலை உற் பத்தி ஒன்றை சந்தைக்கு அறிமுகப்படுத் தியுள்ளது.

அரசபெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தி லுள்ள சுற்றுலா இல்லங்களைப் புனர மைத்து சுற்றுலா பயணிகளுக்கு வழங்கு வதன் மூலம் வருமானத்தை அதிகரிக்க முடிந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்தலை வருமாறு–

காணி இல்லாதவர்களுக்குக் காணி உரிமையை வழங்கும் அரசின் கொள் கைக்கு இணைவாக கூட்டுத்தாபனத் தின் அனைத்துக் காணிகளும் அடுத்த மாத நிறைவு பகுதிக்குள் காணி இல்லாத வர்களுக்கு ஏழு பேர்ச் காணியாக வழங் கப்படும்.

இதேவேளை நக்கில்ஸ் காட்டுக்குரிய பகுதியில் காணி வழங்கப்படவுள்ளது என முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன்.

நக்கில்ஸ் வனத்திற்குச் சொந்தமான பகுதி கொங்கிறீட் தூண்கள் இடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத் திற்கு சொந்தமான கடந்த காலத்தில் பயிர்ச்செய்கைக்கு ஈடுபடுத்தப்படாமல் தற்போது பாழடைந்துள்ள காணிகளே மக்களுக்கு வழங்கப்படவுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ‘நல்லைக் குமரன்’ மலர் இன்று காலை வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக.21

‘நல்லைக் குமரன்’ மலர் வெளியீட்டு விழா இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பா ணம், நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத் தில் யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழுவின் தலைவரும், யாழ். மாநகர ஆணையாளருமான இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறும்.

யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் பிரதம விருந்தினராகவும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பர மாச்சாரிய சுவாமிகள், வீணா கான குரு பீடத்தின் பீடாதிபதி சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக் கள் யாழ்ப் பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் சுவாமி சிதா காசானந்தா, துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் ஆகியோர் ஆசியுரை வழங் குவர்.

சந்நிதியான் ஆச்சிரமத்தி ன் சிவத்திரு செந்தில்வேல் மோகனதாஸ் சுவாமிகளுக்கு யாழ் விருது மற்றும் பொற்கிழி வழங்கலும் இடம்பெறும்.

நல்லைக் குமரன் மலரின் வெளியீட்டுரையை அதன் கௌரவ பதிப்பாசிரியர் ந.விஜ யசுந்தரம் வழங்குவார்.

மலர் ஆய்வுரையை சோ. பத்மநாதன் வழங்குவார்.

பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில் வழங்கலும் இடம்பெறும்.

## ஊவா மாகாணத்தில் ‘சுவசெரிய’ இலவச அம்புலன்ஸ் சேவை!




கொழும்பு ஒக.21

‘சுவசெரிய’ இல வச அம்புலன்ஸ் சேவை அடுத்த வாரம் ஊவா மாகா ணத்திற்கு அறிமுக் கபடுத்தப்படவுள் ளது.

இது தொடர்பான வைபவத்தில் அமைச்சர் ஹரின் பெர்னான்டோ, இராஜாங்க அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, இலங்கைக்கான இந்தியத் தூதவர் தரன் ஜித் சிங் சந்து ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஊவா மாகாணத்திற்கு 26 அம்புலன்ஸ்கள் வழங்கப்படும் என திட்ட முகாமையாளர் சுயான் சத்துரங்க தெரிவித்துள்ளார்.

மேல்,தெற்கு மற்றும் வட மாகாணங்களுக்கு ஏற்கனவே சுவசெரிய இலவச அம்புலன்ஸ் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1990 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு மக்கள் இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### என்ரர் பிரைஸ் வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை 2 ஆயிரம் பேருக்கு கடன் உதவி!

நாட்டின் பொருளாதாரத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவது வர்த்தக சமூகத்தை உருவாக்குவது என்ரர் பிரைஸ் ஸ்ரீலங்கா வேலைத்திட் டத்தின் நோக்கமாகும் என்று அரசு அறிவித்துள்ளது.

இதற்கு தேவையான கடன் வசதி களை வழங்கும் வேலைத்திட் டம் அமுல்படுத்தப்படுகிறது.

புதிய வியாபாரங்களை ஆரம் பிக்கவும், அமுலில் உள்ள வர்த் தகங்களை மேம்படுத்தவும் கடன் திட்டத்தில் வாய்ப்புக் கிடைக்கும்.

என்ரர் பிரைஸ் வேலைத்திட்டத் தின் கீழ் இதுவரை 2000 பேருக்கு கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது என்றும் பிரதேச அபிவிருத்தி வங்கியின் உதவி முகாமையா ளர் கே.ஆரியதிலக தெரிவித்துள் ளார்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 14 கடன் திட்டங்கள் அமுலாகின் றன என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

# புலிகள் வைத்திருந்த ஆயுதங்கள் இப்போது அமைச்சர்கள் வசமா?

## விசாரணைக்குக் கோருகிறார் ஐ.தே.கட்சி எம்.பி



நாட்டில் ஆயுதம் வைத்திருக்க வேண்டியவர்கள் பாதுகாப்புத் துறையினர் எனவும், ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு அரசில் அமைச்சராக இருப்பவராக இருந்தாலும் அவர்களிடம் ஆயுதங்கள் இருக்குமானால் அது குறித்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு நாம் பிரதமரிடம் கோரிக்கை விடுக்கின்றோம் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னர் புலிகள் அமைப்பினரிடம் காணப்பட்ட ஆயுதங்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என எனப் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டிருந்தனர். அதனையொட்டியே இக்கோரிக்கையை அவர் முன்வைத்துள்ளார்.

# ஜனாதிபதி தலைமையில் அரச புகைப்பட விழா- 2018

'இலங்கை அரச புகைப்பட விழா 2018' ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு தாமரை தடாக கலையரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.



உயர்தரத்திலான படைப்புத்திறன் மிக்க புகைப்பட கலையைப் பிரபல்யப்படுத்துதல் மற்றும் உயர் புகைப்பட ரசனையை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்யும் நோக்குடன் அரச புகைப்பட ஆலோசனை பேரவை, இலங்கை கலை மன்றம், கலாசார அலுவல்கள் திணைக்களம், உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் அரச புகைப்பட விழா வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

கலையென்ற வகையிலும் தொழில்ரீதியிலும் புகைப்பட கலையை உயர்தரத்தில் பேணி தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்காக அயராது முயற்சித்துவரும் புகைப்படக் கலைஞர்கள் இதன்போது பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

புகைப்பட கலைஞர் ஒருவர் தமது வாழ்நாளில் ஒரு தடவை மாத்திரம் பெற்றுக் கொள்ளக்கூடிய 'புகைப்பட அபிமானி' வாழ்நாள் விருது பிரபல புகைப்படக் கலைஞர் ஹென்றி ராஜகருணாவிற்கு ஜனாதிபதியினால் வழங்கப்பட்டது.

மானிட நடவடிக்கைகளும் சுற்றாடல் தாக்கங்களும், வாழ்க்கை முறையும் கலாசாரமும், இயற்கை, வனசீவராசிகளும் பூகோளவியலும், வெகுசன ஊடக செய்திகள் மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளிலும் திறந்த பிரிவிலும் முதலிடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்கு ஜனாதிபதியினால் விருது வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரு, உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுரா கோகுல, அரச புகைப்பட ஆலோசனை பேரவையின் தலைவர் பர்டி குணசேகர உள்ளிட்டோர் பங்குபற்றினர்.



# தினசரி ராசி பலன் (21.08.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆவணிதிங்கள் 5ஆம் நாள் செவ்வாய்க்கிழமை ஏகாதசித்திதி முழுவதும் நட்சத்திரம்: மூலம் இரவு 12.33 வரை பின்னர் பூராடம். அமிர்தசித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை3.18 மணி முதல் 4.51 மணி வரை.
**சுபநேரம்** - பகல்10.34 மணி முதல் 12.04 மணி வரை.
**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத வளர்பிறை ஏகாதசி.

பிறந்த நட்சத்திர வழிபாடு- மூலம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**


**மேஷம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். இதுவரை பகையாய் இருந்தவர்கள் மீண்டும் உறவாடுவார்கள். உத்தியோகத்தில் இவர்களின் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படும்.


**ரிஷபம்** அலைச்சல் மிகுந்த நாள். உத்தியோகம் சம்பந்தமாய் நிறைய அலைய வேண்டி வரும். கொடுத்த பணத்தை மீளப் பெறுவதற்கு அலைய வேண்டும். சிலர் அரசாங்க வேலை தேடி அலைவார்கள்.


**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்படு நர்ரது. வியாபாரம் லாபமும், நட்டமுமாக இருக்கும்.


**கடகம்** யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப மகிழ்ச்சி நீடிக்கும். சிலர் அசையாச் சொத்துக்கள் வாங்குவார்கள். அரசு வழியால் சலுகைகள் கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.


**சிம்மம்** அனுகூலமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு உதவிகள் கிடைக்கும்.



**கன்னி** சலனம் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் சலசலப்பு காணப்படும். வியாபாரத்தில் தொய்வு நிலை காணப்படும். உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் அதிகரிக்கும்.


**துலாம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சரிசமமாக இருக்கும். தேக சுகக் குறைவால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். குடும்ப உறவு அமைதியாக இருக்கும்.


**விருச்சிகம்** நன்மையான நாள். பொருளாதாரம் தேவைகளைப் பூர்த்தி செய்யும். குடும்ப உறவில் நல்லிணக்கம் காணப்படும். வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும். அரசாங்கத்தில் பணிபுரிவோருக்கு பதவிகள் கிடைக்கும்.


**தனுசு** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி மேலோங்கும். வாடகை வீட்டில் இருந்த சிலர் சொந்த வீட்டிற்கு குடி போகும் யோகம் உண்டு.


**மகரம்** குழப்பமான நாள். பொருளாதாரம் நலிவடையும். மனதில் ஒரு விதமான கவலை உண்டாகும். பிள்ளைகளால் செலவுகள் அதிகரிக்கும். உடல் நலக் குறைபாடு உண்டாகும்.


**கும்பம்** யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். சிலருக்கு அரசு வழியால் வீடு, காணி என்பன கிடைக்கும். பெண்களுக்கு திடீர்த் திருமண யோகம் உண்டாகும்.


**மீனம்** விருத்தியான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியாபாரம் நன்கு விருத்தியடையும்.

சந்திராஷ்டம நாள்; **கார்த்திகை 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவ தைத் தவிர்க்கவும்.**

# அனர்த்தங்களின் போது நலன்புரி நிலையங்களாக தொழிற்படும் கட்டடங்களை புனரமைக்க நிதி ஒதுக்கீடு!

## வவுனியா மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

வவினியா, ஓக.21

அனர்த்தத்தின் போது நலன்புரி நிலையங்களாக பயன்படுத்தப்படும் பொதுக் கட்டடங்களை புனரமைக்க தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் ஊடாக 55 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் இஸ்மா லெப்பை முகமட் ஹனீபா தெரிவித்துள்ளார்.



ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலங்களில் வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற அனர்த்தங்களின் போது பொதுமக்களை தங்க வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட நலன்புரி நிலையங்களை இனிவரும் காலங்களிலும் அனர்த்தங்கள் ஏற்படும் போது பயன்படுத்தும் வகையில் அவற்றைப் புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி அனர்த்தங்களின் போது நலன்புரி நிலையங்களாகப் பயன்படுத்தப்படும் பொதுக் கட்டடங்களை புனரமைப்பதற்கு தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தால் 55 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியா பிரதேச செயலக பிரிவில் இரண்டு பொதுக் கட்டடங்களும், வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் நான்கு பொதுக் கட்டடங்களும், வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் நான்கு பொது கட்டடங்களும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் ஆறு பொதுக் கட்டடங்களும் என 16 பொதுக் கட்டடங்களைப் புனரமைக்கவே இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுக்கு மிக விரைவில் நியமனம் கிடைக்கும்

கொழும்பு, ஓக.21

விளையாட்டு பயிற்றுவிப்பாளர் நியமனம் மிக விரைவில் வழங்கப்படும் என கல்வியமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு பிரதமரின் வழிகாட்டலில் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தால் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் நியமனம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி நேர்முகத்தேர்வு, உடல்தகைமை தேர்வு அடிப்படையில் இந்த பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் எமது அமைச்சால் வெளியிடப்பட்டிருந்தது.

இருந்தபோதும் சில மாகாணங்களின் அசமந்தப் போக்கால் மாகாண பாடசாலைகளில் நியமிக்கப்படவுள்ள பயிற்றுவிப்பாளர்களின் பாடசாலை விவரம் இதுரை எமக்குக் கிடைக்கப்பெறவில்லை. எனவே இந்த இழுபறியினால் எதிர்வரும் நாள்களில் அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து அமைச்சரவையின் மேலதிக அங்கீகாரத்துடன் நியமனம் வழங்கப்படும்.

இது நல்லாட்சி அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒரு நியமனம். எனவே எவ்வாறான தடைகள் வந்தாலும் பிரதமர், கல்வி அமைச்சரின் உதவியுடன் இந்த நியமனத்தை நாம் வழங்கியே தீருவோம் என தெரிவித்தார்.

# போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மஹிந்த ராஜபக்ஷ அரசு புகலிடமளித்தது!

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு

முன்னைய அரசின் பல முக்கிய உறுப்பினர்கள் போதைப்பொருள் கடத்தல் கும்பல்களுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்தனர் என சட்டம், ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

கடந்த மூன்று வருட கால ஆட்சியின் போது இலங்கையை ஜனநாயகம் நிலவும் சுதந்திர நாடாக நல்லாட்சி அரசு மாற்றியுள்ளது.

நல்லாட்சி அரசில் நாட்டில் குற்றச் செயல்களின் அளவு குறைந்துள்ளது. கடந்த மூன்று வருட காலப் பகுதியில் பாலியல்வன்முறை மற்றும் கொலைகள் குறைந்துள்ளன.

ராஜபக்ஷ காலத்தில் வருடாந்தம் 600 ஆகக் காணப்பட்ட கொலை



களை 400ஆக குறைத்துள்ளோம், சிறுவர் துஷ்பிரயோகம் கொள்ளை போன்ற சம்பவங்களும் குறைவடைந்துள்ளன.

அதே வேளை போதைப்பொருள் ஒழிப்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதைய அரசு குற்றவாளிகளை பாதுகாக்காது. போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களிற்கு எதிர் காலத்தில் கடும் தண்டனைகளை வழங்கப்போகிறோம்.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசு போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களிற்கு புகலிடம் அளித்தது, அவர்களுக்கான பாதுகாப்பை அது வழங்கியது. முன்னைய அரசின் பல முக்கிய உறுப்பினர்கள் போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுடன் நெருக்கமான தொடர்புகளைக்கொண்டிருந்தனர் .பொலிஸார் போதைப் பொருள்களைக் கைப்பற்றியவேளைகளில் அரசின் சிரேஸ்ட உறுப்பினர்கள் தலையிட்டு அவற்றை விடுவித்தனர் . தற்போது சட்டம் ஒழுங்கு அமுலாக்கல் பிரிவினர் சுதந்திரமாக செயற்பட முடிகின்றது.- எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புத்தளம் சிற்றுண்டிச்சாலை மீது தாக்குதல்; முக்கிய சூத்திரதாரி உட்பட மூவர் கைது!

புத்தளம், ஓக.21

புத்தளம், ஆனமடுவ பகுதியில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலைக்குள் புகுந்து தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் முக்கிய சூத்திரதாரி உட்பட மூவரை நேற்று அதிகாலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை புத்தளம் ஆனமடுவ ஆண்டிகம பகுதியில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலைக்குள் புகுந்த கொள்ளைக் கும்பல் அங்கிருந்தவர்களைத் தாக்கிவிட்டு அங்கிருந்த சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டு சென்றுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பிலேயே நேற்று அதிகாலை பிரதான சூத்தரதாரி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதானவர்கள் ஆண்டிகம பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் சிலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் உள்ள அரசியல்வாதியின் ஆதரவாளர்களே தன்னைத் தாக்கியுள்ளனர் எனத்தாக்குதலுக்குள்ளான சிற்றுண்டிச்சாலையின் உரிமையாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹற்றன் பகுதியில் மண்சரிவு அபாயம்

## 23 குடும்பங்கள் இடம்பெயர்வு





ஹற்றன், ஓக.21

ஹற்றன்பொலிஸ்பிரிவுகுட்பட்ட ஹற்றன்ஸ்டதன்தோட்டத்தில்மண்சரிவு அபாயம் காரணமாக 23 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேர் பாதுகாப்பாக ஹற்றன் புரூட்ஹில் தமிழ் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்திய மலைநாட்டில் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து இத் தோட்டத்தில் குடியிருப்புகளுக்கு மேல் உள்ள மலை பகுதியில் பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டு மண் சரிவு அபாயம் தோன்றியதமையை அடுத்தே இந்தக் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

இந்தக் குடும்பங்களின் அங்கத்தவர்களுக்கு தேவையான சமைத்த உணவுகளை வழங்கவும், அத்தியவசியப் பொருள்களை பெற்றுக்கொடுக்கவும், அம்பகமுவ செயலாளரின் பணிப்புரையின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என கிராம சேவையாளர் தெரிவித்தார்.

# மஹிந்த ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிட முடியாது!

## விஜயதாச ராஜபக்ஷ கூறுகிறார்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது என உயர்கல்வியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் முன்னாள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை தடுக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவிவகித்தவரும் இரண்டு தடவைகளிற்கு மேல் போட்டியிட முடியாது என 19 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகள் தெரிவிக்கின்றன.

சில குழுக்கள் சில சட்ட வாதங்களை முன்வைத்து முன்னாள் ஜனாதிபதி மீண்டும் போட்டியிட முடியும் என்ற கருத்தை உருவாக்க முயல்கின்றன. அரசமைப்பு அனுமதிக்காததால் சந்திரிகா குமாரதுங்கவோ மஹிந்த ராஜபக்ஷவோ மூன்றாவது தடவை போட்டியிட அனுமதிக்கப் படவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் சட்டம் தகுதியற்ற அல்லது தகுதி இழந்த ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவைத்தாக்கல் செய்வது எவ்வளவு பாரதூரமானது என்பதைத் தெளிவாக குறிப்பிட்டுள்ளது .

அவ்வாறான ஒரு வேட்



பாளரிற்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியும்.

சில நபர்கள் தாங்கள் இது தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையை பெறப்போகிறார்கள்எனத்தெரிவிக்கின்றனர். ஜனாதிபதி மாத்திரமே இவ் விடயத்தில் உயர்நீதிமன்றின் ஆலோசனையை கோர முடியும்,வேறு எவரும் நேரடியாக ஆலோசனையைக் கோர முடியாது எனவும் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# வறட்சி காரணமாக அம்பாறையில் 20,000 க்கும் மேற்பட்டோர் பாதிப்பு!

கடும் வறட்சி காரணமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள 6 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 20 ஆயிரத்து 338 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அம்பாறை மாவட்ட மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத் தெரிவித்தார்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பவுஸர் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிலவும் வறட்சியான கால நிலையால் பாதிக்கப் படுபவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

தற்போது பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு, நாவிதன்வெளி, தமண, லாகுகல ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள சுமார் 6 ஆயிரத்து 248 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 20 ஆயிரத்து 338 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு பிரதேச செயலகங்களினூடாக குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில், பிரதேச செயலகங்கள் இப்பணியை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

வறட்சிப் பிரதேச மக்களின் தேவைக் கேற்ப பவுஸர் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இப்பணிக்கு உள்ளூராட்சிச் சபைகளும் நிறைவான ஒத்து ழைப்பு நல்கி வருகின்றன.

இதேவேளை, வறட்சி காரணமாக கிழக்கு மாகாணத்திலுள்ள பெரிய, சிறிய குளங்கள், ஆறுகள், ஏரிகள், நீர்நிலைகள் என்பன வற்றின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருகிறது என அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

வறட்சி காரணமாகக் காட்டுமிருகங்களும் குடிதண்ணீரின்றிப் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய வறட்சிக் காலநிலை தொடருமானால், எதிர்வரும் பெரும்போக நெற்செய்கை வெகுவாகப் பாதிக்கப்படும் என அம்பாறை மாவட்ட விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

வறட்சி காரணமாக, அம்பாறை மாவட்டத்தில் இம்முறை சிறுபோகத்தின் போது, மட்டுப்படுத்தப்பட்டளவு காணிகளிலேயே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது அறுவடைப் பணிகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் அமைச்சர்களிடம் ஆயுதம்; உடன் விசாரணை நடத்த வேண்டும்!

## ராவணா பலய தெரிவிப்பு

ஆயுதம் வைத்திருக்கும் முஸ்லிம் அமைச்சர்களின் பெயருடன் தகவல்கள் கிடைத்துள்ள நிலையில் அது குறித்து அரசு விசாரணை நடத்த வேண்டும் என ராவணா பலய அமைப்பின் பொதுச் செயலாளர் இத்தே கந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னர் புலிகள் அமைப்பினரிடம் காணப்பட்ட ஆயுதங்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டிருந்தனர். இது குறித்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதனை வெறும் வார்த்தைகளாக மட்டும் கொள்ளாமல் உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தேரர் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# அரசியல் வியாபாரத்தை இனி மக்கள் சேவையாக்குவோம்

## இப்படிக் கூறுகின்றது ஜே.வி.பி

தற்போதுள்ள அரசியல் வியாபாரத்தை மக்கள் சேவையாக மாற்ற வேண்டிய காலம் வந்துள்ளது என மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தெரிவித்துள்ளது.

அதற்காக கிராமிய மட்டத்தில் உள்ள மக்களை மாற்ற வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளு மன்றஉறுப்பினருமானஅநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொட்டாவ பகுதியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir





# நல்லாட்சியின் சீத்துவம்!

ஒவ்வொரு மனிதனுக்கும் எதிர்காலம் தொடர்பான ஓர் இலக்கு இருக்க வேண்டும் என்பது எவ்வளவிற்கு உண்மையோ அந்தளவிற்கு ஒரு நாட்டிற்கும் தனது எதிர்காலம் தொடர்பான தரிசனம் இருக்க வேண்டும். ஆனால் இலங்கை போகும் பாதையைப் பார்க்கின்றபோது அப்படி யேதும் இருக்கின்றதா என சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

நல்லாட்சி அரசாங்கம் என அழைத்துக்கொள்ளும் மைத்திரி – ரணில் கூட்டணி அரசாங்கம் அதன் மூன்றாவது ஆண்டு நிறைவை சில நாள்களுக்கு முன்னர் கண்டிருந்தபோதும் அது உறுதியளித்த பாதையில் நகர்கின்றதா எனச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த தொடக்கத்தில் இராணுவப் பின்னணி கொண்ட ஆளுநர்களை மாற்றி சிவில் ஆளுநர்களை வடக்கு கிழக்கில் நியமித்தது. இராணுப்பிடியிலுள்ள காணிகளில் சிலவற்றை கட்டம் கட்டமாக விடுவித்தது. அரசியல் கைதிகளில் சிலரை விடுவித்தது. சிலருக்குப் பிணை வழங்கியது. ஆனால் மக்கள் எதிர்பார்ப்பு முழுமையாக ஈடேறவில்லை

ஊழலுக்கு எதிராகப் போராடி, அவற்றினை இல்லாதொழிப்பதாக மக்களுக்கு வாக்குறுதியளித்து அரசாங்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி மூன்று வருடங்கள் நிறைவு பெற்றுள்ள போதும் அவை நிறைவேற்றப்படவில்லை.

மத்திய வங்கி பிணை முறி மோசடி ஆரம்பத்திலேயே அரசாங்கம் மீதிருந்த நன்மதிப்பைக் குறைப்பதற்கு வழிகோலியது. கள்வர்களைப் பிடிப்பதாக கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் கள்வர்களிடத்தில் சிக்கித் தடுமாறும் நிலைமைக்கு இது வழிவகுத்தது.

இதனைத் தவிர நல்லாட்சி அரசாங்கம் விட்ட தவறுகள் சிலவற்றை அண்மையில் இலங்கையிலுள்ள ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக அறியக்கிடைத்தது. அவை பின்வருமாறு:

நாட்டின் பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்டிய தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் இலாபம் ஈட்டும் நிறுவனம் என கூறி அதிகாரத்திற்கு வந்த சிலரால், தற்போது அந்நிறுவனம் 2 ஆயிரத்து 800 கோடி ரூபாவிற் கும் அதிக நட்டத்தை அடைந்துள்ளதாக மாற்றிக்கூறப்பட்டுள்ளது.

இந்த நட்டத்தை மீள செலுத்த வேண் டியிருப்பதும் நாட்டுக்கு வரி செலுத்தும் சாதாரண மக்களே.

பாடசாலை மாணவர்களுக்கு டெப் களைப் பெற்றுக்கொடுப்பதற்கான செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதாகக் கூறி, அதற்கான விலை மனு கோரப்பட்டதிலிருந்து ஊழல் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு இலவச காப்புறுதியைப் பெற்றுத்தருவதாகக் கூறி இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் அண் மைக்காலத்தில் பாரிய சந்தேகத்திற்கிடமான விடயமாகக் காணப்பட்டது.

விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக பல பில்லியன்களைச் செலவிட்டு இறக்குமதி செய்த கறவைப் பசுக்கள் எவ்வித பலனும் அளிக்காது இறந்து போன நிலையில், மீண்டும் 15,000 கறவைப் பசுக்களை இறக்குமதி செய்வதற்கு ஆரம்ப நிதி செலுத்தப்பட்டதும் பிரதமரின் செயலாளரின் மனைவி ஓய்வு பெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் இந்த செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்கு பணிப்புரை விடுத்துள்ளமையும் தற்போது தெரியவந்துள்ளது.

> அடுத்த தேர்தலை எப்படி வெல்லலாம் என்பதில் அக்கறைசெலுத்தி அதற்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படும் தரப்பினர் அரசியல் தீர்வைக் கொண்டு வந்து தமிழர்களை கௌரவத்துடன் வாழ் வதற்கு வழிசமைக்கத்தவறின் அதற்கு பெரும் விலையைக் கொடுக்க நேரிடலாம்.

மத்திய அதிவேக வீதியின் நிர்மாணப் பணியின் மூன்றாம் கட்டத்திற்காக ஜப்பானிடமிருந்து 16 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிக நிதி – அதிக வட்டியின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் காணப்படக்கூடிய கொள்கைத் திட்டங்களை வெளிப்படையாக மீறி இந்த நிர்மாணப் பணிக்கான ஒப்பந்தத்தை ஜப்பான் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியுள்ளனர்.

அதிவேக வீதியின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணியை இலங்கையிலுள்ள நிறுவனம் ஒன்றுக்கு அரச வங்கியின் கடனின் கீழ் வழங்கினர்.

அப்போது கடன் வழங்கிய அரச வங்கி இந்த வீதியின் ஒப்பந்தக்காரருக்கு பில்லியன் கணக்கில் கடன் வழங்கியிருந்தது.

பல்வேறு செயற்றிட்டங்களுக்காக இந்த நிறுவனம் ஆயிரம் கோடி ரூபா கடனை அரச வங்கியிடமிருந்து பெற்றுள்ளது.

இந்த கடனைப் பெற்றுக்கொண்ட குறித்த ஒப்பந்த நிறுவனத்தின் நிறைவேற்று உப தலைவர், கடன் வழங்கிய வங்கியின் பணிப்பாளர் சபையின் உறுப்பினராவார்.

மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வளத்திற்கு முன்னுரிமை வழங்கி பல மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிப்பதாக தெரிவிக்கப்பட்டபோதிலும், கடந்த மூன்று வருடங்களுக்குள் எந்த ஒரு பாரிய மின் உற்பத்தி நிலையங்களும் ஸ்தாபிக்கப்படவில்லை என்பது குறித்து அனைவரும் அவதானத்துடன் உள்ளனர்.

இதற்குப் பதிலாகப் பல்வேறு திட்டங்கள் மூலம் தனியார் மின் உற்பத்தி நிலையங்களூடாக மின்சாரக் கடன் பெறுவதற்காக ஒப்பந்தத்தை புதுப்பிப்பதுடன், கெரவலப்பிட்டியவில் 300 மெகாவோட்ஸ் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நிர்மாணத் திட்டமும் சீர்குலைந்துள்ளது.

தனியார் மின் உற்பத்தி நிலையங்களுக்கு எவ்வித முறையும் இன்றி வழங்குவதற்கு ஆணையிட்டது இந்த அரசாங்கத்தின் தலைமையே!

ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தின் போது துபாயுடன் கொடுக்கல் வாங்கல் இடம் பெறுவதாகத் தெரிவித்து ஆட்சிக்கு வந்ததன் பின்னர் குற்றம்சாட்டியவர்கள் தங்களுடைய வர்த்தகச்செயற்பாடுகளை குறித்த நபர்களுக்கு விற்பனை செய்ததுடன், ஹொரணையில் பாரிய டயர் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கு வரிச்சலுகையையும் பெற்றுக்கொடுத்தனர்.



இப்படி இன்னமும் பல தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில் புதிய அரசியல் யாப்பை உருவாக்கி அதன் மூலமாக கௌரவத்துடன் வாழ்வதற்கான அதிகாரப் பகிர்வைக் கொண்டு வருகின்ற முயற்சி முழுமைப்படுத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுவது பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்த தேர்தலை எப்படி வெல்லலாம் என்பதில் அக்கறைசெலுத்தி அதற்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படும் தரப்பினர் அரசியல் தீர்வைக் கொண்டு வந்து தமிழர்களை கௌரவத்துடன் வாழ் வதற்கு வழிசமைக்கத்தவறின் அதற்கு பெரும் விலையைக் கொடுக்க நேரிடலாம். *

---



மன்னார் மாவட்டத்தின் கல்விக்கான தனது சேவையை ஆற்றிவரும் துரையம்மா அன்பகத்தினர் மன்னார் கள்ளியடி கத்தாளம்பிட்டி கிராமத்தின் தெரிவு செய்யப்பட்ட பயனாளி மாணவர்களின் 16 குடும்பங்களுக்கான பெறுமதியான உலர் உணவு பொதிகளை வழங்கியுள்ளனர்.

இந் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் மன்னார் கள்ளியடி கத்தாளம்பிட்டி கிராமசேவகர் பிரிவில் நடைபெற்றது.

துரையம்மா அன்பகத்தின் 10 ஆவது ஆண்டை முன்னிட்டு வாழ்க்கைச் சூழலில் பொருளாதாரப் பிரச்சினையால் கல்வியைத் தொடரமுடியாத நிலையில் காணப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளி மாணவர்களுக்களின் 16 குடும்பங்களுக்கே இவ் உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ – 112)



- ஆதி.வள்ளியப்பன் -

# சுற்றுச் சூழல் பாதுகாப்பில் அசட்டை அதனால் வந்ததே கேரள வெள்ளம்

கேரளத்தின் வரலாறு காணாத பெருவெள்ளத்துக்குக் காரணம் சபரிமலைக் கோயிலில் பெண்கள் வழிபடும் உரிமை கோருவதும், சிறுபான்மை மதங்களை அம்மாநில மக்கள் பின்பற்றுவதும்தான் என்று வழக்கம்போல அறிவிலிக் கருத்துகள் பொதுவெளியில் பரப்பப்படுகின்றன. இந்தப் பேரிடருக் கான அறிவியல்பூர்வமான காரணத்தை ஆராய்ந்து, அதற்கான தீர்வுகளை எதிர்காலத்திலாவது செயல்படுத்தத் தயா ராக வேண்டும்.

ஐக்கிய முற்போக்கு அரசு, உலகப் பொக்கிஷமான மேற்கு மலைத் தொடரைப் பாதுகாப்பதற்கான பரிந்துரைகளை வழங்க மாதவ் காட்கில் தலைமையில் ஒரு குழுவை அமைந்தது. பெங்களூர் இந்திய அறிவியல் நிறுவனத்தில் சூழலியல் அறிவியல் மையத்தின் நிறுவனத் தலைவராகச் செயல்பட்டவர் மாதவ் காட்கில்.

**புறந்தள்ளப்பட்ட ஆலோசனை**

முன்னோடி சூழலியல் ஆராய்ச்சியாளரான மாதவ் காட்கில், அறிவியல்பூர்வமாகவும் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டும் உண்மையிலேயே பயனளிக்கக்கூடிய யோசனைகளை அரசுக்குப் பரிந்துரைத்தார். ஆனால், அவரின் அறிக்கையைப் புறந்தள்ளிவிட்டு, கஸ்தூரி ரங்கன் தலைமையில் இன்னொரு



குழுவை அமைத்தது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு. அதற்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பேற்ற பா.ஜ.க. தலைமையிலான அரசும் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் மாதவ் காட்கில் அறிக்கையை எதிர்ப்பதாகவே சொன்னது. மத்திய அரசு மட்டுமில்லை, மேற்கு மலைத் தொடர் உள்ள மாநிலங்களில் ஆட்சியில் இருந்த எல்லா அரசுகளும் காட்கில் அறிக்கையைக் கடுமையாக எதிர்த்தன. அவற்றில் மகாராஷ்டிரம்,



கோவா, கர்நாடகத்துடன் கேரளமும் அடக்கம்.

இன்றைக்கு வெள்ளத்தால் கேரளம் தத்தளித்துக் கொண்டிருப்பதற்குக் கடும் மழை மட்டுமே காரணமல்ல. மாதவ் காட்கில் அறிக்கையை ஏற்று நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருந்தால், இன்றைக்கு நேர்ந்துள்ள சேதத்தின் அளவீட்டை நிச்சயமாகக் குறைத்திருக்க முடியும். அந்த அறிக்கை முன்வைத்த பரிந்துரைகள் எதிர்கால இயற்கைச் சீற்றங் களின்போதும் உதவியிருக்கும்.

மாதவ் காட்கில் தலைமையிலான மேற்கு மலைத் தொடர் சூழலியல் நிபுணர் குழு 2011இல் அளித்த முக்கியப் பரிந்துரைகள்தான் என்ன?

1. ஒட்டுமொத்த மேற்கு மலைத் தொடரையும் சூழலியல்ரீதியில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய மூன்று மண்டலங்களாகப் பிரிக்க வேண்டும். அதன்படியே வளர்ச்சித் திட்டங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

2. சூழலியல் பாதிக்கப்படக்கூடிய மண்டலம் 1 பகுதியில் எந்தப் பேரணைகளும் கட்டப்படக் கூடாது. இதில் கேரளத்தின் அதிரப்பள்ளி, கர்நாடகத்தின் குண்டியா நீர்மின் திட்டங்கள் அனுமதிக்கப்படக் கூடாது.

3. கனிமச்சுரங்க மாஃபியாவால் வழிநடத்தப் பட்டுக் கொண்டிருக்கும் கோவா மாநிலத்தில் புதிய கனிமச் சுரங்கத் திட்டங்கள் அனுமதிக்கப்படக்கூடாது, ஏற்கெனவே செயல்படுத்தப்படும் திட்டங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

4. மகாராஷ்டிர மாநிலம் ரத்தினகிரி, சிந்துதுர்க் மாவட்டம் மட்டுமின்றி மேற்கு மலைத் தொடர் பகுதிகளில் சூழலியலை மாசுபடுத்தும் திட்டங்களை முற்றிலும் நிறுத்தியாக வேண்டும். ஏற்கெனவே, இருக்கும் நிலக்கரி அனல்மின் நிலையங்களின் மாசுபாட்டை முற்றிலும் கட்டுப்படுத்தியாக வேண்டும்.

இதற்கெல்லாம்மேலாக, சூழலியல்பாதுகாப்பு தொடர்பாக மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு, பொறுப்புணர்வை அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வளர்ச்சித் திட்டங்கள் குறித்த முடிவெடுத்தலிலும் நிர்வகிப்பதிலும் மக்களை ஈடுபடுத்த வேண்டும். வன உரிமைச் சட்டத்தை முறையாக நடை முறைப்படுத்துதல், சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று வழங்குதலில் அறிவியல் பூர்வமான மாற்றங்கள், மக்கள் நலன் சார்ந்த அனைத்துத் தகவல்களையும் வெளிப்படையாக வெளியிடுதல், சமூகத் தணிக்கை போன்றவற்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென காட்கில் அறிக்கை பரிந்துரைத்தது. இந்த அறிக்கையைப் புறக்கணித்ததன் பலனைத்தான் மிக மோசமான வகையில் இப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

> கனிமச் சுரங்கங்களும், மலைகளை உடைத்தலுமே நிலச்சரிவுகள், சேற்றுப் பகுதிச் சரிவுகளுக்கு முக்கியக்காரணம் என்கிறார் மாதவ் காட்கில்.





**நிலச்சரிவு வெள்ளத்தாலா?**

கனிமச் சுரங்கங்களும், மலைகளை உடைத்தலுமே நிலச்சரிவுகள், சேற்றுப் பகுதிச் சரிவுகளுக்கு முக்கியக் காரணம் என்கிறார் மாதவ் காட்கில். நிலத்தடியில் நீரைப் பிடித்து வைக்கக்கூடிய மலைப் பகுதிகளும் சுரங்கங்களும் அகற்றப்படுவதால், அங்கு இயற்கையாகச் சேமிக்கப்பட்ட, சேமிக்கப்படக்கூடிய நிலத்தடி நீருக்கு அழுத்தம் அதிகரிக்கிறது. இதுவே நிலச்சரிவு, சேற்றுப் பகுதி சரிவுக்கு அடிப்படைக் காரணம். சட்டத்துக்குப் புறம்பான – கல்குவாரிகள், மணல் குவாரிகள், தடுப்பணைகள் போன்றவை நேரடியாக நிலச்சரிவைத் தூண்டிவிடு கின்றன. கேரளப் பேரிடர் நிர்வாக ஆணையத்தின் கணக்கீட்டின்படி கேரள நிலப்பரப்பில் 14 வீதம் நிலச்சரிவு ஏற்படுவதற்கு சாத்தியமுள்ள பகுதி. இதில் பெருமளவு மேற்கு மலைத் தொடர் பகுதியிலேயே



அமைந்துள்ளன. நிலச்சரிவால் உயிரிழப்பு மட்டுமில்லாமல் வீடுகளும் வயல்களும் அழிகின்றன. கேரள மேற்கு மலைத் தொடரில் 2,700 குவாரிகள் இருப்பதாக காட்கில் குழு தெரிவித்திருந்தது. இவற்றில் 1,700 குவாரிகள் கல்லை உடைத்து மண்ணாக்கும் வேலையைச் சட்டத்துக்குப் புறம்பாகச் செய்துவந்தன. சுரங்கம் – குவாரிகள், நிலப் பயன்பாடு மாற்றம், பெரும் கட்டுமானத் திட்டங்கள் போன்றவற்றை கேரளக் காடுகள் – மலைப் பகுதிகளில் முற்றிலும் நிறுத்த வேண்டும் என்று காட்கில் அறிக்கை பரிந்துரைத்திருந்தது.

**எதிர்ப்புகளின் பின்னணி**

கேரளத்தில் அதிகம் பாதிக்கப்பட்ட இடுக்கி, வயநாடு மாவட்டங்களில் 123 கிராமங்கள் காட்கில் பரிந்துரைத்த சூழலியல்ரீதியில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய மண்டலத்தின் கீழ் வருகின்றன. சுற்றுலாத் தொழிலை மையமாகக் கொண்ட சட்டத்துக்குப் புறம்பாக தங்கும் விடுதிகளை நடத்துபவர்களும் காடுகளை ஆக்கிரமித்த பெருவிவசாயிகளும் இந்தப் பரிந்துரைகளுக்கு அன்றைக்குக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தனர். வயல்களையும் நீர்நிலைகளையும் பொதுநலத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தலாம் எனக் கேரள வயல் மற்றும் நீர்நிலைச் சட்டத்தில், அம்மாநில அரசு சமீபத்தில் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தது. இதன்மூலம் வெள்ள வடிகால்கள் ஆக்கிரமிக்கப்படும் ஆபத்தும் அதிகரித்திருக்கிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மட்டுமே இந்த உலகையும் மக்களையும் எதிர் காலத்தில் பாதுகாப்பதற்கான ஒரே ஆயுதம்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது ஒரு வழிப்பாதை அல்ல. எதை நாம் விதைக்கிறோமோ, அதை மட்டுமே அறுவடை செய்ய முடியும். *

காலைக்கதிர் Kalaikkathir





# குழந்தைகளின் மொழியறிவை வளர்ப்பது எப்படி?

குழந்தைகளின் மொழியறிவினை மேம்படுத்த இன்றைய பெற்றோர்கள் அதிக அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

உலகம் தொழில்நுட்ப வளர்ச்சியால் வேகமாக சுருங்கி வருகிறது. எதிர் காலத்தில் உங்கள் குழந்தைகள் உயர்ந்த நிலையை அடைய வேண்டுமானால் அவர்களுக்கு நிச்சயம் பன்மொழித் திறன் அவசியமாகும். குறைந்த பட்சம் தாய்மொழி மற்றும் உலக தொடர்பு மொழியாவது அறிந்திருக்க வேண்டும்.

குழந்தைகளின் மொழியறிவினை மேம்படுத்த இன்றைய பெற்றோர்கள் அதிக அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இருந் தாலும் நாம் அறியாத மொழியை பள்ளி வழியே பிள் ளைகள் கற்றுக் கொண்டுவிடுவார்கள் என நினைப்பது



தவறாகும். உதாரணமாக நமக்குத்தான் தமிழைத் தவிர மற்ற மொழிகள் தெரியாது. பிள்ளைகளாவது அறிந்து கொள்ளட்டும் என்ற எண்ணத்தில் மற்றைய மொழிப் பாடங்களை தேர்வு செய்து படிக்க வைக்கும் பெற்றோர் கள் அதிகம்.

ஆனால், ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது மொழியறிவைப் பொறுத்தவரை உண்மையாகத்தான் இருக்கிறது. ஏனெனில் பட்டப்படிப்புவரை ஆங்கிலத்தில் படித்தவர்கள் கூட அந்த மொழியில் பேசுவதற்கு தடு மாற்றம் காண்கிறார்கள். எனவே மொழியறிவு என்பது படிப்பதால் மட்டும் வந்துவிடாது. மொழிகளை அறிய, சிறப்பாக உச்சரிக்க கற்றுத் தர வேண்டும். பேசுவதற் கான சூழலையும் ஏற்படுத்தித்தர வேண்டும். அல்லது நாமும் அதே மொழியில் கலந்துரையாடி குழந்தைக ளின் மொழியறிவை வளர்க்கலாம்.

ஸ்பெல்லிங் எனப்படும் உச்சரிப்பு முறைதான் எண் ணங்களையும், சிந்தனைகளையும் செம்மையான முறையில் பகிர்ந்துகொள்ளத் துணைபுரியும். இது தொடர் பான பயிற்சி, மிக இளம் வயதில் வீட்டிலிருந்தே தொடங் கப்பட வேண்டும். பள்ளிகளில், மாணவர்களின் உச்சரிப் புத்திறனை சிறப்பாக்கும் வகையில், பயிற்சிகள் வழங்கப் பட்டாலும், அந்த திறனை மேலும் சிறப்பாக்க பல்வேறு வழிகள் உள்ளன. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி அதற்கு பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தி ருக்கிறது. விளையாட்டுவழியாகவும், புதிர்கள் வழியாகவும், சொல் விளையாட்டு வழியாகவும் மொழியறிவை வளர்க் கும் 'அப்ளிகேசன்கள்' இன்று மிகுந்துள்ளன.

**வித்தியாசமான அணுகுமுறை**

ஆரம்ப நிலையில் எழுத்துகள், சொற்களைப் படிக்கும் சிறு குழந்தைகளுக்கான விளையாட்டுப் பயிற்சி இது. எழுது, படி என்று குழந்தை களை இம்சிப்பதைவிட, விளை யாட்டாய் ஒரு விடயத்தை கற்றுக்கொள்ளச் செய்தால், வித்தியாசமான முறையில் சொல்லிக் கொடுத் தால் அவர் கள் எளிதாகவும், விருப்பத்துட னும் கற்றுக்கொள்வார்கள். அந்த வகையில், இது ஒரு மிக எளிமையான, எப்போதும் விளையாடக்கூடிய விளையாட்டு.

குழந்தைகளுக்கு, உங்களின் முதுகில், அவர்களுக்கு பிடித்த எழுத்துகள், வார்த்தைகளை எழுதச் சொல்லி, அது என்னவென்று நீங்கள் உணர்ந்து சொல்லலாம். இதன்மூலம் அவர்கள் உற்சாகம் பெறுவார்கள். மேலும், அவர்களது முதுகில், நீங்கள், சில வார்த்தைகளை எழுதி, அதை கண்டுபிடிக்கச் செய்து, அவர்களின் உச் சரிப்பு திறனை வளர்க்கலாம்.

**புதிர் மற்றும் விளையாட்டு பயிற்சி**

'ஸ்கிராபிள்' எனப்படும் வார்த்தை விளையாட்டுகள், குறுக்கு எழுத்துப் போட்டிகள் குழந்தைகளுக்கு மட்டுமா னவையல்ல. வயதிற்கு ஏற்ற வகையில் விதவிதமான வார்த்தை விளையாட்டுப் போட்டிகள் உள்ளன. அனை வரின் ஆதரவாலும் பத்திரிகைகளில் இத்தகைய போட்டி கள் தவறாமல் இடம் பெறுகின்றன என்பதும் குறிப்பிடத்தக் கது. குடும்ப அளவில், மிகவும் விரும்பப்படுகிற ஒரு விளையாட்டாக, இந்த விளையாட்டு கருதப்படுகிறது. இந்த விளையாட்டில், குழந்தைகளுடன் நீங்களும் இணைந்து கொண்டால், அவர்களின் உச்சரிப்பு முறை முன்னேறு வதை விரைவில் அறியலாம்.

**பாடலாய் பாடலாம்**

குழந்தைகள் விளையாட்டிற்கு அடுத்த படியாக பாடல்களின் வழியே நிறைய விடயங்களைக் கற்றுக் கொள்வார்கள். அதனால்தான் சிறுவர்களுக்கு அதிக அளவில் 'ரைம்ஸ்'கள் கற்றுத் தரப்படுகின்றன. இது மொழியறிவையும் வளர்க்க சிறந்த வழியாகும். நீங்கள் கற்றுத் தர விரும்பும் விடயங்களை, உங்களால் முடிந்த அளவு ஒரு ராகத்துடன் பாடல்போல இசைத்து சொல்லிக் கொடுங்கள். குழந்தைகளும் அதே பாணியில் விரைந்து பாடி பழகிக் கொள்வார்கள்.

**இதர வழிகள்**

குழந்தைகளின் எளிய கற்றலுக்கு உதவும் வகையில், பல்வேறு வயதுப் பருவத்தினருக்கு ஏற்ற புத்தகங்கள், பலவிதமான எளிய உபகரணங்கள் மற்றும் தொழில் நுட்ப அம்சங்கள் (apps) இன்று கிடைக்கின்றன. அதை, உங்களது குழந்தையின் ஆர்வத்திற்கேற்ப வாங்கிப் பயன்படுத்தலாம்.

பெற்றோர், தங்களின் சூழலுக்கு ஏற்ப, பெரிய வசதி கள் ஏதுமின்றியே, தங்களின் குழந்தைகளுக்கு சிறப் பான பயிற்சி கொடுக்கலாம். குழந்தைகள், அபார கற் பனைத்திறன் மிக்கவர்கள். எனவே, அவர்களிடம் ஒரு சிறிய கதையை எழுதிக் காட்டுமாறு கூறலாம். அது மிக சாதாரணமாக இருந்தாலும் பாராட்டி உற்சாகப்படுத் துங்கள். உலகின் மிகச்சிறந்த படைப்பாளர்கள் எல்லாம் பின்தங்கிய குடும்பத்தில் இருந்து வந்தவர்கள்தான். அவர்கள் வளர்ச்சியில் அவர்களது பெற்றோர் காட்டிய அக்கறையே அவர்களின் முன்னேற்றத்துக்கு காரண மாக இருந்திருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொண்டால் போதும்.மொத்தத்தில் பெற்றோர்களின் இடைவிடாத அர்ப்பணிப்பே, ஒரு குழந்தையின் மொழி யறிவு மற்றும் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகிறது.

**கவனம் தேவை**

அதே நேரத்தில் இன்னொரு முக்கியமான விடயத் தையும் பெற்றோர் கவனிக்க வேண்டும். மேற்குறிப் பிட்டுள்ள பயிற்சிகள் குழந்தைகளின் உச்சரிப்புத் திற னை மேம்படுத்திக் கொள்வதற்கான சிறப்பான வழிகள் தான். ஆனால் வார்த்தைகள், உங்களது குழந்தையின் அறிவு நிலைக்கேற்ப இருக்கின்றனவா என்பதை கவனித் துக் கொள்ளுங்கள். குழந்தைகளால் புரிந்துகொள்ள இய லாத, கடின வார்த்தைகளாக இருந்தால் குழந்தை கள் சீக்கிரமே அந்த விளையாட்டின் மீதான விருப்பத்தை இழந்துவிடுவார்கள்.

# ஆரோக்கியத்துக்கு சில வழிகள்

உடலின் ஆரோக்கியத்தை அதிகரிக்க நாம் கண்டிப்பாக பின்பற்ற வேண்டிய அத்தியாவசிய வழிமுறைகளை இந்தத் தொகுப்பில் பார்க்க லாம்.

**இடத்திற்கு ஏற்ப உணவு**

நாம் பிறந்து வளரும் இடத்துக்கு ஏற்ப நமது உடல் மூலக்கூறுகளில் மாற்றம் ஏற்படும். ஆகவே, ஒருவர் தான் பிறக்கும் இடத்தில், அந் தந்த மண்ணில் விளையும் பொருள்களை அன் றாட உணவாக எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். தமிழர் தேசத்தின் பாரம்பரிய உணவு களான கம்பு, சாமை, சிறுதானியங்கள் ஆகிய வற்றை தமிழர்கள் தங்கள் அன்றாட உணவில் சேர்த்துக்கொண்டாலே போதும்.

**புதிதாக சமைத்த உணவு**

எப்போதும் புதிதாகத் தயாரித்த, மிதமான சூடுள்ள உணவுகளையே சாப்பிடப் பழகுங்கள். 'பிரஷ்ஷான' உணவுகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். இதுபோன்ற உணவுகள்தான் நம்



உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கும். நோய் எதிர்ப்பு சக்தியும் சீரான அளவில் கிடைக்கும். சுரப்பிகளைச் சரியான அளவில் சுரக்க உதவும்.

**எண்ணெயில் கவனம்**

மீண்டும் மீண்டும் ஒரே எண்ணெயைக் கொதி க்கவைத்து, சமையலுக்குப் பயன்படுத்துவதைத் தவிருங்கள். இதனால் கொஞ்சம் கொஞ்சமாக எண்ணெயில் அமில மாற்றம் ஏற்பட்டு, தயாரிக் கப்படும் உணவு நச்சுத்தன்மை பெறக்கூடும். குறிப்பாக ஹோட்டல் உணவுகளில் இந்த பிரச் சினை அதிகமாக காணப்படும். இது உணவில் உள்ள கெட்ட கொழுப்பை வெளியேற்றும். உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்கும்.

**நொறுக்குத்தீனியை தவிர்க்குக**

மைதா உணவுப் பொருள்கள், நொறுக்குத் தீனிகள், பாக்கெட்டில் அடைக்கப்பட்ட பதப்படுத் தப்பட்ட உணவுகள், சூப்பர்மார்கெட்டுகளில் விற்கப்படும் இன்ஸ்டன்ட் உணவுகள், டின்னில் அடைத்த உணவுப் பொருள்கள் உள்ளிட்டவற் றைத் தவிருங்கள்.

**குளிர்பானத்திற்கு 'நோ'**

குளிர்ச்சியான தண்ணீர், கோலா பானங்களை உணவுக்குப் பின்னர், முன்னர், நடுவில் அருந்து வதைத் தவிர்க்க வேண்டும். இதனால் சமிபாடு தாமதப்படும். உடல்பருமன் போன்ற பிரச்சினை கள் உண்டாகும்.

**சமிபாட்டுக்கு உதவுங்கள்**

சாப்பிட்ட உணவு சமிபாடடைந்து மீண்டும் பசி எடுக்கும்போதுதான் அடுத்த வேளை உணவைச் சாப்பிட வேண்டும். இதுதான் உணவியலின் பொன்விதி. இப்படிச்செய்தால் உடல் ஆரோக்கியம் மேம்படும். போர் அடிக்கிறது என நொறுக்கு தீனி களை அவ்வப்போது சுவைப்பது தவறான செயல்.

**சாப்பிட்டவுடன் குளிக்கக் கூடாது**

சாப்பிட்டவுடன் குளிப்பதைத் தவிருங்கள். சாப்பிட்டவுடன் குளித்தால் சமிபாட்டுக்கு உதவுவ தற்கான ரத்த ஓட்டம் வயிற்றுக்குச் செல்லாமல் கை, கால் தசைகளுக்குச் சென்றுவிடும். இத னால் செரிமானம் தாமதப்படும்.

**சீக்கிரமாக் சாப்பிடுங்கள்**

இரவு படுக்கைக்குச் செல்வதற்கு மூன்று மணி நேரத்துக்கு முன்னர் சாப்பிட்டுவிட வேண்டும். இல்லையெனில் சமிபாடடையும் வேலை நடந்து கொண்டிருக்கும்போது நீங்க தூங்க சென்றால் தூக்கமும் சமிபாடும் பாதிக்கும்.

**தூங்குவதற்கு முன் ஒரு டம்ளர் பால்**

இரவு தூங்கச் செல்வதற்கு முன்னர் அரை டீஸ்பூன் பனங்கற்கண்டு, கால் டீஸ்பூன் மஞ்சள் தூள் போட்டு ஒரு டம்ளர் மிதமான சூடுள்ள பாலை அருந்தலாம். இதனால், நன்கு தூக்கம் வரும். மனஅழுத்தம் குறையும். சமிபாடு எளிதாகும்.

காலைக்கதிர் Kalaikkathir



# வெளிநாடுகளிலிருந்து தொழிலாளர்களை கொண்டு வரவேண்டிய நிலை உருவாகும்

## அமைச்சர் மங்கள எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 21

இளைஞர்கள் நாட்டிற்குள் நிலவும் சில தொழில்வாய்ப்புகளை நிராகரிப்பார்களாயின் அத் தொழில் வாய்ப்புகளுக்கு வெளிநாடுகளிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டு வரவேண்டி வரும் என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

'என்டபிரைஸ் ஸ்ரீலங்கா' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மக்களுக்கு கடனுதவி வழங்கும் நிகழ்வு மாத்தறை உயன்வத்தையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

அரச தொழில்வாய்ப்புகளைப் பெறுவதற்காக அமைச்சர்களின் காரியாலயங்களுக்கு முன்னால் மக்கள் காத்துக் கொண்டிருக்கும் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும். மக்களுக்கு அரச தொழில்வாய்ப்பு வழங்குவதற்கு வெற்றிடம் இல்லை. அந்தளவுக்கு அரச திணைக்களங்கள் அனைத்திலும் தொழிலாளர்கள் நிரம்பியுள்ளனர்.

ஆயிரம் பேருக்கு தொழில்வாய்ப்பு வழங்க வேண்டிய அரச திணைக்களங்களில் 3 ஆயிரம் தொழிலாளர்கள் வரையில் உள்ளனர். அவ்வாறான வேலைத் திட்டத்தில் நானும் கடந்த காலங்களில் பங்காளராகியுள்ளேன். உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான பின்னர் வெற்றிடம் இல்லாத தொழில் வாய்ப்புகளுக்கும் தமது ஆதரவாளர்களை உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றனர். அதன்மூலம் அத்திணைக்களங்கள் மீண்டும் நஷ்டநிலைக்குச் சென்று விடுகின்றன.

மத்திய கிழக்கு நாடுகளில் வழங்கப்படும் சம்பளத்தையும் விட அதிகளவான சம்பளம் பெறும் சாதாரண தொழில் வாய்ப்புகள் நாட்டில் உள்ளன. எனினும் அத்தொழில்வாய்ப்புகளை வகிப்பதற்கு எம்மவர்கள் வெட்கப்படுகின்றனர். இருந்தபோதிலும் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று கூலித்தொழில் செய்கின்றனர்.

இவ்வாறு சென்றால் நாட்டில் நிலவும் அவ்வாறான தொழில்துறைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டு வரவேண்டிய நிலை ஏற்படும். அப்போது வெளிநாட்டிலுள்ளவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படுகிறது என கோஷமிட வேண்டாம்.

மேலும் சிலர் அரச தொழில்வாய்ப்புகளை எதிர்பார்க்காது, ஓட்டோச் சாரதிகளாகவும் ஏனைய சுயதொழில்களிலும் ஈடுபடுகின்றனர். என்னைப் பெறுத்தவரை முச்சக்கர வண்டி ஓட்டுநர்களாக தொழில் புரிபவர்கள் 35 வயதைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும் என்ற ஏற்பாட்டுடன் நான் முரண்படுகிறேன்.

ஏனெனில் தமக்கு தொழில்வாய்ப்பு இல்லாத சந்தர்ப்பத்தில் ஓட்டோவாவது ஓட்டித் தொழில் செய்து வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு அவர்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும். – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பம்பலபிட்டி ஸ்ரீவஜிராராம தர்ம வித்தியாலய நூற்றாண்டு விழா ஜனாதிபதி தலைமையில்!




பம்பலப்பிட்டி ஸ்ரீ வஜிராராம தர்ம வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவு விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வஜிராராமாதிபதி அதிவண. திரிகுணாமலயே ஆனந்த மகா நாயக்க தேரரின் வழிகாட்டலில் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை அமரபுர மகா நிக்காயவின் மகா நாயக்கர் அக்கமகா பண்டித அதிவண கொடுகொட தம்மாவாச தேரர் இந்நிகழ்விற்கு தலைமை தாங்கினார்.

'21 ஆம் நூற்றாண்டிற்கு அறநெறிப் பாடசாலைக் கல்வி' என்ற தலைப்பில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சம்பத் அமரதுங்க நிகழ்வில் விசேட உரையாற்றினார்.

வஜிராராமாதிபதி இலங்கை அமரபுர தர்ம ரக்ஷித நிக்காயவின் மகா நாயக்கர் ராஜகீய பண்டித திரிகுணாமலயே ஆனந்த தேரர், கொழும்பு மாளிகாகந்த வித்தியோதய பிரிவெனாதிபதி தர்னபதி வண. பலங்கொட சோபித நாயக்க தேரர் மற்றும் தென்னிலங்கைக்கான பிரதான சங்க நாயக்கர் கலாநிதி வண. ஓமல்பே சோபித தேரர் ஆகியோர் விசேட ஆசியுரை வழங்கினர்.

அறநெறிப் பாடசாலையின் நூற்றாண்டுநிறைவை முன்னிட்டு நூற்றாண்டு விழா நினைவு மலர் இதன்போது வெளியிடப்பட்டதுடன், அதன் முதற்பிரதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மூன்று நிக்காயாக்களின் மகா சங்கத்தினர், பிரதமர் ரணில் விக்ரமசிங்க, புத்த சாசன அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# 4,000 ஹெக்ரேயர் காணியில் பெரிய வெங்காயம் உற்பத்தி!



மாத்தளை மாவட்டத்தில் இவ்வருடம் சிறுபோகத்தில் 4 ஆயிரம் ஹெக்ரேயர் காணியில் பெரிய வெங்காயம் உற்பத்தி செய்ய விவசாயத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

தம்புள்ளை, சீகிரிய, கலேவெல, நாவுல, பகுதிகளில் அதிகளவு பெரிய வெங்காயம் உற்பத்தி செய்யப்படவுள்ளது.

இதன் மூலம் 70 ஆயிரம் மெற்றிக் தொன் பெரிய வெங்காயத்தை அறுவடை செய்ய முடியும் என்று மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவ்வப்பகுதி கமநல சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு தரமான பெரிய வெங்காய விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# மட்டு. பொதுச்சந்தையில் உயிர்வாயு ஆலை உருவாக்கும் செயற்திட்டத்திற்கு அடிக்கல்!



மட்டக்களப்பு பொதுச் சந்தையில் உயிர்வாயு ஆலை உருவாக்கும் செயற்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு மா நகர ஆணையாளர் என்.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகரசபை மற்றும் ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டம் என்பவற்றின் ஏற்பாட்டில் அண்மையில் இந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் மாநகர முதல்வர் தி.சரவணபவான், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகரசபை உறுப்பினர்கள், மாநகர பிரதி ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# யானைகள் – மனிதர்கள் மோதல் தேசியப் பிரச்சினையாகியுள்ளது




## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21

யானை மற்றும் மனிதர்களுக்கிடையிலான பிரச்சினை தேசியப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. யுத்தத்தில் ஏற்பட்ட தீர்வைப்போன்ற தீர்வு யானை மற்றும் மனிதர்களுக்கிடையிலான பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என்று நிலையான அபிவிருத்தி , வன ஜீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

வனஜீவராசிகள் விவகாரம் மற்றும் அதற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் உள்ளிட்ட அனைவரும் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். அமைச்சருக்கு ஏற்றாற் போல் சட்டமூலத்தை புறந்தள்ளிச் செயற்பட முடியாது.

ஒரு வருடத்திற்குள் நாட்டின் சகல பிரதேசங்களிலும் யானை வேலி அமைக்கப்படும். இதன் காரணமாக நூற்றுக்கு தொண்ணூற்று ஐந்து வீதமான பிரச்சினைகள் தீர்க்கப்படுமென நாம் எதிர்பார்க்கிறோம்.

வனஜீவராசிகள் திணைக்களத்தில் காணப்படும் ஆளணி மற்றும் ஏனைய தேவைகள் மிக விரைவில் பூர்த்தி செய்யப்படும். உரிய வளங்கள் கிடைப்பதன் மூலம் தான் உரிய தீர்வு எட்டப்படும். யானை மற்றும் மனிதன் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளை முன்வைக்கின்ற போது வேதனத்தை எதிர்பார்த்து கடமை புரியும் கொழும்பில் இருக்கின்ற ஒரு சில சூழலியலாளர்கள் எமக்கு எதிராகப் போலிப் பிரசாரங்களை மேற்கொள்வது உண்மைக்குப் புறம்பானது. – என்று அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்துல்லாஹ் மஹ்ரூப், கே.துரைரட்ணசிங்கம், திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.அருந்தவராஜா மற்றும் முப்படை உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# இத்தாலியில் பாலம் இடிந்த விபத்தில் பலியானோர் தொகை 43 ஆக உயர்வு!





இத்தாலி நாட்டின் ஜெனோவா நகரில் நெடுஞ்சாலைப்பாலம் இடிந்து விழுந்த விபத்தில் பாலத்தின் அடியில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 43 ஆக அதிகரித்துள்ளது.

இத்தாலி நாட்டின் வடமேற்கில் மலைகள் சூழ்ந்த பகுதியில் ஜெனோவா நகரம் அமைந்துள்ளது. மலைகளுக்கு இடையில் கோன்கிரீட் தூண்களை அமைத்து அவற்றின் மீது உருவாக்கப்பட்டுள்ள வீதிகள் வழியாகதான் இங்கு வாகனப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இடையில் சில வாய்க்கால் மற்றும் கால்வாய் பாலங்களும் உள்ளன.

இந்நிலையில், ஜெனோவா நகரின் மேற்கில் பிரபல தொழிற்பேட்டை அருகே அமைந்துள்ள ஏ10 நெடுஞ்சாலையில் இருக்கும் மோரான்டி என்னும் பாலத்தின் ஒருபகுதி கடந்த 13 ஆம் திகதி திடீரென்று இடிந்து விழுந்தது.

சுமார் 200 மீற்றர் நீளத்திலான பகுதி சுமார் 100 அடி ஆழத்தில் நொருங்கி விழுந்ததால் அப்போது அவ்வழியாக சென்ற பல கார்களும் லொறிகளும் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கிக் கொண்டன. அவற்றை மீட்கும் பணியில் வீரர்கள் ஈடுபட்டு வந்தனர்.

இந்த விபத்தில் 20 பேர் உயிரிழந்த னர் என முதல்கட்ட தகவல் வெளியானது. பின்னர், வாகன இடிபாடுகளுக்கு இடையில் இருந்து அடுத்தடுத்து உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. நேற்றுமுன்தினம் இரவு முடிவடைந்த மீட்பு பணிகளின்போது கார்களுக்கு இடையில் சிக்கி இருந்த 3 உடல்கள் கிடைத்தன.

இதைதொடர்ந்து, இந்த விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 43 ஆக உயர்ந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# நைஜீரியாவில் 19 கிராமவாசிகள் தீவிரவாதிகளின் தாக்குதலில் பலி!



நைஜர், ஓக.21

நைஜீரியா நாட்டில் உள்ள கிராமம் ஒன்றை பயங்கரவாதிகள் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தியதில் 19 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் சம அளவில் வாழ்ந்து வரும் நைஜீரியா நாட்டில் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியை கொண்டு வர வேண்டும் என்று போகோ ஹறம் அமைப்பை சேர்ந்த பயங்கரவாதிகள் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் கிராமங்களுக்குள் கும்பலாக நுழையும் இவர்கள், அங்குள்ள மக்களை ஈவிரக்கமின்றி சுட்டுக் கொன்று குவிக்கின்றனர். போகோ ஹறம் அமைப்பை தவிர ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பும் அங்கு தாக்குதல் சம்பவங்களை நிகழ்த்தி வருகிறது.

இந்நிலையில், வடகிழக்கு நைஜீரியாவின் காசா முல்லா மாகாணத்தில் கிறிஸ்துவர்கள் கணிசமாக வசிக்கும் மைலாரி எனும் கிராமத்தை சூழ்ந்து அதிகாலை நேரத்தில் பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில், அப்பாவி பொதுமக்கள் 19 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், படுகாயம் அடைந்த பலர் சிகிச்சைக்காக அருகே உள்ள மருத்துவ முகாம்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு எந்த பயங்கரவாத அமைப்புகளும் இதுவரை பொறுப்பேற்கவில்லை என அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்தோனேசியாவில் மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம்!

ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வரும் இந்தோனேசியாவின் லோம்பாக் தீவில் நேற்று முன்தினம் மாலை மீண்டும் 6.9 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

பூகம்பங்களை அடிக்கடி சந்திக்கும் பூமியின் நெருப்புக் கோளம் பகுதியில் அமைந்துள்ள நாடுகளில் ஒன்றான இந்தோனேசியாவில் உள்ள லோம்போக் தீவில் சில வாரங்களுக்கு முன்னர் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சுமார் 460 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதற்கிடையே, இந்தோனேசியா தலைநகரான ஜகார்த்தாவில் இருந்து சுமார் 1500 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தீவின் கிழக்கு பகுதியில் நேற்றுமுன்தினம்காலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. பெலண்டிங் நகரில் இருந்து தென்மேற்கே சுமார் 7 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.3 அலகுகளாகப் பதிவானது.

இந்நிலையில், இந்தோனேசியாவின் லோம்பாக் தீவில் நேற்றுமுன்தினம் மாலை மீண்டும் 6.9 ரிச்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆனாலும் சுனாமி எச்சரிக்கை விடப்படவில்லை. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை.

இந்தோனேசியாவின் லம்போக் நகரில் தற்போது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய பாக்.பிரதமர் இம்ரான்கானை சந்திக்க விரைகிறார் அமெ.அமைச்சர்



அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ அடுத்த மாதம் (செப்ரெம்பர்) பாகிஸ்தான் செல்கிறார் என தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டமையைத் தொடர்ந்து பாகிஸ்தான்– அமெரிக்கா உறவில் லேசான விரிசல் நிலவிவருகிறது. பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் வழங்குகிறது என பாகிஸ்தானைத் தொடர்ந்து குற்றம்சாட்டி வரும் ட்ரம்ப், அந்த நாடு மீது கடுமையான விமர்சனங்களையும் வைத்தார்.

பயங்கரவாதிகள் விவகாரத்தில் அமெரிக்காவுக்கு ஆதரவாக பாகிஸ்தான் நடந்து கொள்ளவில்லை எனக் கடந்த ஜனவரி மாதம் குற்றம் சாட்டிய ட்ரம்ப், வெறும் பொய்யும், ஏமாற்று நடவடிக்கைகளிலேயே அந்த நாடு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது எனவும் சாடினார். அத்துடன் பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் இராணுவ நிதியுதவியை குறைக்க வகை செய்யும் பிரேரணை ஒன்றும் அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் இவ்வாறு விரிசல் ஏற்பட்டு இருந்த நிலையில், பாகிஸ்தானின் புதிய பிரதமராக இம்ரான்கான் பதவியேற்று உள்ளார். அவர் அமெரிக்காவுடனான உறவை மேம்படுத்துவதற்கு முன்வந்துள்ளார். கடந்த மாதம் தனது வெற்றி உரையில் கூட இதைக் குறிப்பிட்டு இருந்தார்.

இதற்குப்பச்சைக்கொடி காட்டும் வகையில் அமெரிக்காவும், பாகிஸ்தானுக்கு ஆதரவான கருத்துகளை வெளியிட்டு உள்ளன. குறிப்பாக இம்ரான்கானின் பதவியேற்பை வரவேற்றுள்ள அமெரிக்கா, பாகிஸ்தானின் வளம் மற்றும் அமைதி மேம்பாட்டுக்காக புதிய ஜனநாயக அரசுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாகசெய்திவெளியிட்டு உள்ளது.

இந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ அடுத்த மாதம் (செப்டம்பர்) தொடக்கத்தில் பாகிஸ்தான் செல்கிறார் என பாகிஸ்தானின் 'டான்' பத்திரிகை செய்தி வெளியிட்டு உள்ளது. அதன்படி செப்ரெம்பர் 5 ஆம் திகதி பாம்பியோவின் இஸ்லாமாபாத் பயணம் அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தான் செல்லும் மைக் பாம்பியோ புதிய பிரதமர் இம்ரான்கானை சந்தித்து இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து பேச்சு நடத்துகிறார். மேலும் அமெரிக்காவின் ஆப்கானிஸ்தான் அமைதி நடவடிக்கைகளில் பாகிஸ்தானின் ஆதரவு குறித்தும் மைக் பாம்பியோ பேசுவார் என கூறப்படுகிறது.

இதன் மூலம் புதிய பிரதமர் இம்ரான்கானை சந்திக்கும் முதல் வெளிநாட்டு தலைவர் என்ற சிறப்பை மைக் பாம்பியோ பெறுகிறார். அவருடன் அமெரிக்காவின், தெற்கு ஆசியா விவகாரத் துறைக்கான தலைவர் ஆலிஸ் வெல்ஸ் அடங்கிய உயர்மட்டக் குழுவினரும் பாகிஸ்தான் செய்கின்றனர்.

இதற்கிடையே பாகிஸ்தானின் புகழ்பெற்ற பஞ்சாப் மாகாண சட்டமன்றத்துக்கு நடந்த தேர்தலில் இம்ரான்கானின் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சி வெற்றி பெற்றது. இதைத்தொடர்ந்து அந்த மாகாண முதலமைச்சராக உஸ்மான் பஸ்தர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# எகிப்தில் வலைத்தளங்களை கட்டுப்படுத்த புதிய சட்டம்!

எகிப்து நாட்டில் இணைய வழிக் குற்றத்தைத் தடுக்கும் வகையில் வலைத்தளங்களைக் கட்டுப்படுத்தும் சட்டப் பிரேரணையை அந்நாட்டு நாடாளுமன்றத்தில் சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

தேசப் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான வலைத்தளங்களை முடக்க இச்சட்டம் வழிவகை செய்யும்.

நாடாளுமன்றத்தில் நடந்த வாக்கெடுப்பில் இந்த சட்டப் பிரேரணை நிறைவேறியது. இதையடுத்து ஜனாதிபதி அப்தெல் பாட்டா அல் - சிசி இந்த புதிய சட்டத்துக்குநேற்றுமுன்தினம்ஒப்புதல்அளித்தார்.

இந்தச் சட்டத்தின் படி இணையத்தில் சர்ச்சைக்குரிய வலைத்தளங்களை உருவாக்கி நடத்துபவர்கள் மற்றும் அந்த வலைத்தள பக்கங்களைப் பயன்படுத்துபவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் அல்லது அபராதம் செலுத்த வேண்டி இருக்கும்.

நாட்டின் நிலையற்ற தன்மை மற்றும் பயங்கரவாதம் போன்றவற்றை எதிர்கொள்ளப் புதிய சட்டம் உதவும் என அரசு தரப்பில் கூறப்படுகிறது.

ஆனால், நாட்டில் உள்ள அனைத்து அரசியல் எதிரிகளையும் நசுக்கவே இந்த சட்டம்இயற்றப்பட்டுள்ளதாகமனிதஉரிமை அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன.

மேலும் இந்தச் சட்டம் கையெழுத்தாவதற்கு முன்னதாகவே சுமார் 500 வலைத்தளங்கள் முடக்கப்பட்டுவிட்டன எனக் கெய் ரோவை தலைமையகமாக கொண்ட சுதந் திரமான சிந்தனை மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சங்கம் தெரிவித்துள்ளது.

# உலகம் முழுவதும் சுனாமி தாக்குதல் அபாயம்; நிபுணர்கள் குழு ஆய்வில் தெரியவந்துள்ளது!

வொஷிங்டன், ஓக.21

பருவநிலை மாற்றம் காரணமாக கடல்நீர் மட்டம் தற்போது சிறிதளது உயர்ந்துள்ளதால் உலகம் முழுவதும் சுனாமித் தாக்குதல் அபாயம் உள்ளது என்று நிபுணர்கள் குழு ஆய்வில் தெரியவந்துள்ளது.

பருவநிலை மாற்றத்தால் கடல்நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து அமெரிக்காவின் வேர்ஜீனியா தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவிப் பேராசிரியர் ரொபர்ட் வெயிஸ் தலைமையிலான நிபுணர்கள் குழு ஆய்வு மேற்கொண்டது.

அதில் பருவநிலை மாற்றம் காரணமாக கடல்நீர் மட்டம் தற்போது சிறிதளது உயர்ந்துள்ளது. குறிப்பாக தெற்கு சீனாவில் மகாயூ கடலில் 1.5 அடி முதல் 3 அடி வரை கடல் நீர் உயர்ந்துள்ளது.

இங்கு அதிக அளவில் மக்கள் வாழ்கின்றனர். கடல்நீர்மட்டம் உயர்ந்து வருவதால் அங்கு 8.8 ரிக்டரில் நிலநடுக்கம் ஏற்படும் அபாயம் உள்ளது. அதன் காரணமாக சுனாமி ஏற்படும் அபாயமும் உள்ளது.

தொடக்கத்தில் தென்சீனக் கடல் பகுதியில் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இருந்து சுனாமி தொடங்கி தெற்கு தாய்வான் வழியாக உலகம் முழுவதும் சுனாமித் தாக்குதல் அபாயம் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக் கட்டுரை அறிவியல் இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

# வெள்ளத்திலிருந்து கேரளா மீளும்!

## முதலமைச்சர் விஜயன் முழு நம்பிக்கை



கேரளா, ஓக.21

கேரளா மாநிலம் வெள்ள பாதிப்புகளில் இருந்து விரைவில் மீண்டு விடும் என நம்புகிறேன் என்று முதலமைச்சர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை கொட்டித் தீர்த்து வருகிறது. இந்த மழையால் பல்வேறு மாவட்டங்கள் நீரில் மூழ்கி, வெள்ளக் காடாக காட்சியளிக்கிறது. மழை மற்றும் நிலச்சரிவு போன்ற சம்பவங்களால் கேரளாவில் உயிரிழக்கும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இயற்கை சீற்றத்தால் ஏற்பட்டுள்ள பெரும் பேரழிவில் இருந்து கேரளாவை மீட்டெடுக்க பல்வேறு மாநிலங்களும் கேரள மாநிலத்துக்கு உதவிக் கரம் நீட்டி வருகின்றன.

இதுதொடர்பாக முதலமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு–

கேரளாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்பு பணிகள் முழுவீச்சில் நடக் கின்றன. வெள்ள பாதிப்பில் இருந்து கேரளா விரைவில் மீளும் என நம்புகிறேன்.

கனமழை மற்றும் வெள்ளத்தால் 5 லட்சம் பேர் தங்களது இருப்பிடங்களை விட்டுப் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர். 22,034 பேர் பத் திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் வடிந்த பகுதிகளில் மின் விநியோகம் அளிப்பது குறித்து ஆலோசனை மேற்கொண்டு வருகிறோம். வெள்ளம் வடிந்தால்தான் முழுமையான சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள முடியும்.– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொச்சிக்கு விமான சேவை கடற்படைத் தளத்திலிருந்து



கொச்சியில் மழை வெள்ளத்தால் விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. இந்த நிலையில், கொச்சி கடற்படை தளத்தில் இருந்து நேற்று முதல் விமான சேவை தொடங்கியது.

கேரளாவில் முன்னெப்போதும் இல்லாத அளவில் கன மழை பெய்து பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் கடலோர மாவட்டமான கொச்சியில் இடைவிடாமல் மழை மற்றும் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக, கொச்சி சர்வதேச விமான நிலையம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியில் தண்ணீர் புகுந்தது.

இதனால் கொச்சி விமான நிலையம் கடந்த 14 ஆம் திகதி மூடப்பட்டது. இதனால் கொச்சி செல்ல வேண்டிய உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்கள் அனைத்தும் திருவனந்தபுரம் அல்லது கோழிக்கோடு விமான நிலையத்துக்கு திருப்பி விடப்படுகின்றன.

இந்நிலையில் கொச்சி விமான நிலைய வளாகத்தில் தேங்கியிருந்த வெள்ள நீர் வடியாத நிலையில், கொச்சியில் உள்ள கடற்படை விமானத் தளத்தை, பயணிகள் விமானம் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்படும் விமானப்படை விமானங்கள் வந்து செல்வதற்கு பயன்படுத்த முடிவு செய்யப் பட்டது.

அதன்படி கொச்சி கடற்படை விமான தளத்தில் இருந்து விமான சேவை தொடங்கப்பட்டது. கடற்படை தளத்தில் முதல் வர்த் தக விமானம் நேற்றுக் காலை தரையிறங்கியது.

# உண்டியலில் தான் சேர்த்த ரூ.9 ஆயிரத்தை கேரளா வெள்ளத்திற்கு அனுப்பிய சிறுமி



கேரளா, ஓக.21

கடந்த 4 ஆண்டுகளாக சேமித்து வந்த உண்டியல் பணம் ரூ.9 ஆயிரத்தை கேரள வெள்ள நிவாரண நிதிக்காக விழுப்புரம் சிறுமி அனுப்பி உள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

விழுப்புரம் கே.கே. சாலை சிவராம் லேஅவுட் பகுதியை சேர்ந்த சிவசண்முகநாதன் – லலிதா தம்பதியின் மகள் அனுப்பிரியா (வயது 8) என்கிற சிறுமி, தான் உண்டியல்களில் சேமித்து வைத்திருந்த ரூ.9 ஆயிரத்தைத் தனது தந்தை உதவியுடன் கேரள வெள்ள நிவாரண நிதிக்கு வழங்கி உள்ளாள்.

இதுகுறித்து அனுப்பிரியா கூறுகையில்–

நான் சைக்கிள் வாங்க வேண்டும் என்பதற்காக தந்தை மற்றும் உறவினர்கள் கொடுக்கும் பணத்தை 5 உண்டியல்கள் மூலம் கடந்த 4 ஆண்டுகளாக சேமித்து வந்தேன்.

இந்த நிலையில் கேரள மாநிலம் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்டது குறித்து செய்திகள் மூலம் அறிந்து வேதனை அடைந்தேன். அதனால் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரள மக்களுக்கு உதவும் வகையில், நான் சேமித்த ரூ.9 ஆயிரத்தை எனது தந்தை மூலம் கேரள முதல் –அமைச்சரின் நிவாரண நிதிக்கு வங்கி வரைவோலை எடுத்து அனுப்பி உள்ளேன்.– என்று தெரிவித்துள்ளார்.

# கேரளாவுக்கு பைபர் படகு ஒன்றை உதயநிதி ஸ்டாலின் அனுப்பினார்!




சென்னை, ஓக.21

மு.க.ஸ்டாலின், நடிகர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஏற்பாட்டில் கேரளாவுக்கு இயந்திரத்துடன் கூடிய பைபர் படகு என்று லொறியில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கேரளாவில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் வகையில் பைபர் படகை அனுப்பி வைக்குமாறு அங்குள்ள கலைத்துறை அமைப்பை சேர்ந்தவர்கள் உதயநிதி ஸ்டாலினிடம் கோரிக்கை வைத்தனர். இதுகுறித்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினிடம் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தலின் பேரில், நாகப்பட்டினம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாகப்பட்டினத்தில் இருந்து எந்திரத்துடன் கூடிய பைபர் படகு லாரியில் அனுப்பி வைக்கப் பட்டது. அந்த படகில் உதயநிதி ஸ்டாலின் பெயரும், உதய சூரியன் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளது.

# கேரளாவுக்கு கட்டார் 34 கோடி ரூபா உதவி!

டுபாய், ஓக.21

கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கேரள மாநிலத்துக்கு கட்டார், சுமார் 34 கோடி இந்திய ரூபாவை முதல் கட்ட நிதியாக வழங்குகின்றன நேற்று முன்தினம் அறிவித்தது.

மழை, வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள கேரளாவுக்கு பல்வேறு மாநில அரசுகளும், வெளிநாடுகளும் உதவி செய்து வருகின்றன. கடந்த சனிக்கிழமை ஐக்கிய அரபு அமீரகம் கேரளாவில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிதி திரட்டி வழங்குவதற்காக அவசர குழு ஒன்றை அமைத்தது. இதன் மூலம் நிதி திரட்டப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் கட்டார் நாடு, சுமார் 34 கோடி இந்திய ரூபாவை கேரள மாநிலத்துக்கு முதல் கட்ட நிதியாக வழங்குவதாக நேற்று முன் தினம் அறிவித்தது.

# வெள்ள பாதிப்புக்கு உள்ளான கேரளாவுக்கு சர்வதேச சமுதாயம் துணை நிற்க வேண்டும்!

## புனித பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தல்



வத்திக்கான் நகரம், ஓக.21

வெள்ளத்தால் பாதிப்பு அடைந்துள்ள கேரள மக்களுக்கு சர்வதேச சமுதாயம் துணையாக நின்று தேவையான உதவி களை வழங்க வேண்டும் என பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.

கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை கொட்டி தீர்த்து வருகிறது. கனமழை மற்றும் நிலச்சரிவு போன்ற சம்பவங்களால் கேரளாவில் உயிரிழக்கும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கடந்த நூறாண்டுகளில் இல்லாத மிகப்பெரும் இயற்கைப் பேரழிவை கேரளா சந்தித்துள்ளது. நேற்று முன்தினம் மட்டும் 33 பேர் பலியாகியுள்ள நிலையில் மழை பாதிப்பால் இதுவரை 357 பேர் உயிரிழந்துள்ளனர்.

இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்டுள்ள பெரும் பேரழிவில் இருந்து கேரளாவை மீட்டெடுக்கப் பல்வேறு மாநிலங்களும் கேரள மாநிலத்துக்கு உதவிக்கரம் நீட்டி வருகின்றன.

இந்நிலையில், வெள்ளத்தால் பாதிப்பு அடைந்துள்ள கேரள மக்களுக்குச் சர்வதேச சமுதாயம் துணையாக நின்று தேவையான உதவிகளை வழங்க வேண்டும் என பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.

# தி.மு.க தலைவர் கருணாநிதி நினைவிடத்தில் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார் விஜயகாந்த்



அமெரிக்காவில் இருந்து சிகிச்சை முடிந்து சென்னை திரும்பிய தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், மெரினாவில் உள்ள கருணாநிதி நினைவிடத்தில் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் மருத்துவ சிகிச்சைக்காக கடந்த ஜூலை மாதம் அமெரிக்கா சென்றிருந்தார். அங்கு அவர் சிகிச்சை பெற்று வந்த நேரத்தில் கடந்த 8 ஆம் திகதி தி.மு.க தலைவர் கருணாநிதி வயது மூப்புக் காரணமாகக் காலமானார்.

கருணாநிதியின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் நேரில் பங்கேற்க இயலாத விஜயகாந்த் அவரது மறைவிற்கு கண்ணீர் மல்க வீடியோ மூலம் இரங்கல் தெரிவித்தார்.

பார்ப்பவர்களை நெகிழச்செய்யும் விதமாக இருந்த அந்த வீடியோவில், 'நான் அமெரிக்காவில் இருந்தாலும் என் எண்ணங்களும், நினைவுகளும் தமிழகத்தில் தான் இருக்கின்றன கலைஞர் இறந்துவிட்டார் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. கருணாநிதியைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், திமுக தொண்டர்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறேன்' என குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், அமெரிக்காவில் சிகிச்சை முடிந்து நேற்று சென்னை திரும்பிய விஜயகாந்த், மனைவி பிரேமலதா மற்றும் மைத்துனர் சுதிஷ் ஆகியோருடன் மெரினாவுக்கு சென்று கருணாநிதியின் நினைவிடத்தில் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

## நிர்மாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணத்துவமுடைய சுயாதீனக் குழுவின் அறிக்கை பெறப்படும் என்று யாழ். மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த கூட்டம் மாநகர மேயர் இ. ஆர்னோல்ட் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில், யாழ்ப்பாணம் சீனியர் ஒழுங்கையில் உள்ள உப வீதி செப்பனிடல் தொடர்பில் மாநகர சபை உறுப்பினர் எஸ். மயூரன் முறைப்பாடொன்றைச் சபையில் முன்வைத்தார். இதன்போது குறிப்பிட்ட வீதி தரமற்றதாகப் போடப்பட்டிருப்பதாகவும், வரும் மழை காலத்தில் அந்த வீதி இடிந்து குண்டும் குழியுமாகும் அபாயமுள்ளதாகவும் மாநகர சபை உறுப்பினர் இரா. செல்வவடிவேல் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் இடம்பெற்ற விவாதத்தின்போது கருத்துத் தெரிவித்த மாநகர சபை உறுப்பினர் ம. அருள்குமரன், நிர்மாண வேலைகள் மற்றும் திட்டங்கள் முடிவடைந்த பின், வேலைகளை மதிப்பீடு செய்து, வேலைகளுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன் அந்தந்தத் துறை சார் நிபுணத்துவமுடைய சுயாதீனக் குழுவின் அறிக்கை பெறப்படவேண்டும் என முன்மொழிந்தார். மாநகரசபை உறுப்பினர் என. எம். பாலச்சந்திரன் அதனை வழிமொழியச் சபை அந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. (ஐ)

## விஜயகலாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் குறித்து விஜயகலா மகேஸ்வரன் நிகழ்த்திய உரை தொடர்பாக, சட்டமா அதிபரிடம் சபாநாயகர் ஆலோசனை கோரியிருந்தார்.

இந்த நிலையில், சட்டமா அதிபர் திணைக்களம், தமது ஆலோசனையைச் சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு அனுப்பியுள்ளது.

அதில், விடுதலைப்புலிகளின் மீள் எழுச்சிக்கு அழைப்பு விடுத்த விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக, நிலையியல் கட்டளை விதிமுறைகளின் அடிப்படையில் சபாநாயகர் நடவடிக்கை எடுக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரச நிகழ்வு ஒன்றில் விஜயகலா மகேஸ்வரன் நிகழ்த்திய உரை தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளையும் தமது திணைக்களம் ஆய்வு செய்தது என்றும் சபாநாயகருக்குச் சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

இதுபற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட சிறப்பு பொலிஸ் குழு தமது அறிக்கையை பொலிஸ்மா அதிபரிடம் கையளித்திருந்தது. அவர் அதனைச் சட்டமா அதிபருக்கும் அனுப்பியிருந்தார்.

இந்த அறிக்கையை மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தலைமையிலான சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டவாளர் குழு கவனமாக ஆராய்ந்த பின்னர், தமது பரிந்துரைகளைச் சட்டமா அதிபருக்கு அனுப்பியிருந்தனர் என்றும் சட்டமா அதிபர் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இது தொடர்பாக சபாநாயகரின் செயலக அதிகாரி ஒருவரை கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தொடர்பு கொண்டு வினவியபோது, அத்தகைய அறிக்கை ஏதும் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து இன்னமும் கிடைக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## தெற்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட வெளிநாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுச் சிறப்புச் சந்திப்பொன்று இடம்பெற்றது.

கைதடியிலுள்ள முதலமைச்சரின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நேற்று காலை நடந்தது..

சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் நிறைவில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்–

பல நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்துள்ளார்கள். இங்குள்ள நிலைவரங்கள் தொடர்பிலும் தமிழ் மக்களுக்கான அமைதியை எந்த வழிகளிலே ஏற்படுத்தலாம் என்பது சம்பந்தமாகவும் அறிந்து கொள்வதற்காகவே அவர்கள் வந்துள்ளனர்.

பலரும் பலவிதமான பாண்டித்தியம் பெற்றவர்கள். அவர்கள் அந்தப் பின்னணியிலிருந்து பல கேள்விகளைக் கேட்டார்கள். அவற்றுக்கு நாம் பதிலளித்தோம். அவர்களிடம் முக்கியமாக ஒரு விடயத்தை எடுத்துக் கூறியுள்ளேன்.

எங்களுக்கு இடையே நல்லிணக்கம் ஏற்படவேண்டுமாயின், தமிழ் மக்களுடைய மனங்களில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். வடக்கு – கிழக்கைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தெற்கிலுள்ளவர்கள் நடந்து கொள்வார்களாயின் எங்களால் எந்தக் காலத்திலும் நல்லெண்ணத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியாது.

அமைதி ஏற்படவேண்டுமாயின் நாங்கள் சமநிலையிலுள்ளவர்களாக நடவடிக்கைகளில் ஈடுபட்டால்தான் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று அவர்களிடம் எடுத்துரைத்தேன்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் அதனை ஏற்றுக்கொண்டார்கள். பல விதமான கேள்விகளைக் கேட்டு இங்கு நடப்பவற்றை அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

இராணுவம் இங்கு தொடந்து நிலைகொண்டிருப்பது, தெற்கிலிருந்து மகாவலித் தண்ணீரைத் தருவதாகக் கூறிவிட்டு, தென்னிலங்கை மக்களைக் கொண்டு வந்துகுடியேற்றுவது – மகாவலித் தண்ணீரைத் தராமல் இருப்பது போன்ற இங்கு நடப்பவற்றை அவர்களுக்கு எடுத்துக் கூறினேன்.

தமக்குத் தெரியாத பல விடயங்களை எம்முடன் சந்தித்துப் பேசியமையால் தெரிந்து கொண்டுள்ளனர் என அவர்கள் கூறினார்கள்.

பல நாடுகளையும் சேர்ந்தவர்கள் சந்தித்திருந்தமை எமக்கு நன்மையாக இருந்தது. அவர்களுடைய பின்னணி, யோசனைகள், என்ன அடிப்படையில் அவர்கள் ஒவ்வொரு கேள்வியையும் எழுப்புகின்றார்கள் என்பது எமக்கு நன்மையளிப்பதாக இருந்தது – என்றார். (ஐ-7)

## பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் செயலாளர் திருமதி சாந்தி ஜெயசேகரவிடம் கையளித்தார்.

இது குறித்து விசாரணை நடத்தி உடன் நடவடிக்கை எடுப்பதாக ஆணைக்குழுவின் செயலாளர் உறுதிளித்தார் என வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

இந்த முறைப்பாட்டின் பிரதிகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன, கணக்காய்வாளர் நாயகம் குணவர்தன ஆகியோரிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் ஜி.ரி.லிங்கநாதன் குறிப்பிட்டார். (ஐ-100)

## மருத்துவருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கப்பட்டமையைக் கண்டித்து யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.போதனா வைத்திய சாலை முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை மதியம் அரை மணி நேரக் கண்டனப் போராட்டத்தில் மருத்துவர்கள் ஈடுபட்டனர்.

தாக்குதலாளிகளைப் பொலிஸார் விரைந்து கைது செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்த மருத்துவர்கள், கைது செய்யப்படாதவிடத்து, தாம் தொடர் போராட்டங்களை முன்னெடுப்பார்கள் எனவும் தெரிவித்தனர்.

யாழ். போதனா வைத்திய சாலை சத்திர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் மருத்துவர் இம்மானுவேல் சந்திரகுமார் என்பவருக்கே இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

கொக்குவில் சம்பியன் ஒழுங்கையில் உள்ள அவரது வீட்டுக்குள் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு அத்துமீறி நுழைந்த கும்பல், வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் மற்றும் வீட்டில் இருந்த பொருள்களை அடித்துச் சேதப்படுத்திய பின்னர் தப்பிச் சென்றமையை கண்டித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-7)

## நிறைவேற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அந்தக் கட்சியின் தலைவர் ஜீ.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடு இப்போது இருக்கும் நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு நாம் முற்றாக எதிர்ப்பு தெரிவிக்கின்றோம். இந்த காலத்துக்கு அவசியமான ஒரு நடவடிக்கையாக நாம் இதனைப் பார்க்கவில்லை.

நிறைவேற்ற அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதனால், நாட்டின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படும். புதிய யோசனையாக முன்வைக்கப்பட்டுள்ள அரசியல்யாப்பு சீர் சிருத்தத்தில், ஆளுநர்கள் அந்தந்த மாகாண முதலமைச்சர்களின் உத்திரவுக்கு அமையவே பணியாற்றுவதாக இருக்கிறது. இதனால் ஜனாதிபதிக்கான பெருமளவிலான அதிகாரங்கள் குறைகின்றன.

அதில் ஒரு மாகாணத்தின் நிறைவேற்று அதிகாரம் அந்த மாகாண அமைச்சரவைக்கே இருப்பதாக தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை நிறைவேற்று அதிகாரத்தை இந்த நாட்டின் தலைவரான ஜனாதிபதியே பயன்படுத்தி வந்தார். இந்த புதிய அரசமைப்பு யோசனைக்கு அமைய அது முற்றாக மாற்றமடைகிறது. இதனால் என்ன நடக்கப்போகிறது?

நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க ஆளுநருக்கு அதிகாரம் இருக்கிறது. இந்த புதிய அரசமைப்புக்கு அமைய, ஆளுநர் அந்தந்த மாகாண முதல்வரின் பரிந்துரைக்கு அமையவே நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கலாம். நாடாளுமன்ற உறுப்பினர், விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக எடுக்கப்படக்கூடிய சட்ட நடவடிக்கைகள் குறித்து, சட்டமா அதிபர், கரு சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு அறிவித்துள்ளார்.

விஜயகலாவுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார்களா? இல்லை. 6 ஆம் திருத்தச்சட்டத்தில், இது குறித்து தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வேறு இராச்சியம், ஒற்றையாட்சியைச் சிதைப்பது போன்றவற்றிற்கு துணை போனால் அது பாரிய குற்றமாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அவர்கள் நாடாளுமன்ற உறுப்புரிமையை இழக்க நேரிடும் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் இதுவும் புதிய அரசமைப்பு யோசனையினால் தடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் மீது வழக்கு தொடர்ந்து அவர்கள் குற்றவாளிகளாகத் தீர்ப்பு வந்தாலும், அதனை அந்த மாகாண முதலமைச்சர் ஆளுநரின் ஊடாக மாற்றியமைத்து அவர்களுக்கு மன்னிப்பினை வழங்கலாம் – என்றார்.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகளின் வாழ்க்கை நிலை உயர்வடைந்தது. எனினும் அவர்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ்தான் உள்ளனர்.

– இவ்வாறு நேற்று யாழ். வந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

முன்னாள் போராளிகளுடன் நாங்கள் சேர்ந்துகொண்டால், அரசு என்ன நினைக்குமோ, ஏதாவது நடைபெறுமோ? என்ற அச்சம் மக்களிடையே உள்ளது. அதனால் எங்களுடைய முன்னாள் போராளிகளோடு சேர்ந்திருப்பதை ஊர் மக்கள் தவிர்ப்பதையும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் காட்டினேன் என்னும் முதலமைச்சர் ஊடகவியலாளர்களிடம் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்–

முன்னாள் போராளிகள் பலர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலத்தில் அவர்களை இராணுவத்தினர் தம்வசமாக்கினார்கள். 'நாங்கள் உங்களை விடுவிக்கின்றோம், நீங்கள் எம்முடன் இணைந்து பணியாற்றுங்கள் – தகவல்களைச் சேகரித்துத் தாருங்கள்' என்று இராணுவத்தினர் கேட்டுக்கொண்டனர்.

அதனால் முன்னாள் போராளிகளில் பலர் இராணுவத்தினருடன் சேர்ந்து வேலை செய்கின்றனர். இப்போதும் அப்படித்தான். அவர்களுடைய வாழ்க்கை நிலை உயர்ந்தது. ஆனால் அவர்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றமையை நான் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் உணர்த்தினேன்.

மேலும் எமது சமுதாயத்திலே முன்னாள் போராளிகள் தொடர்பில் ஒரு விதமான கரிசனை இருப்பதையும் சுட்டிக்காட்டினேன். முன்னாள் போராளிகளுடன் நாங்கள் சேர்ந்துகொண்டால், அரசு என்ன நினைக்குமோ, ஏதாவது நடைபெறுமோ என்ற அச்சம் மக்களிடையே உள்ளது. அதனால் எங்களுடைய முன்னாள் போராளிகளோடு சேர்ந்திருப்பதை ஊர் மக்கள் தவிர்ப்பதையும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் காட்டினேன்.

அது அவ்வாறு இருக்கக் கூடாது. ஆனால் நாங்களும் அரசும் இணைந்து முன்னாள் போராளிகளுக்கான பல திட்டங்களைச் செய்து முடிக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்தினேன். அவ்வாறான செயற்றிட்டங்களை நாங்கள் ஆராய்ந்து செய்து கொண்டிருக்கின்றோம் என்பதையும் கூறினேன் – என்றார்.(ஐ-7)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுடன் இடைநிறுத்தப்பட்டிருந்த அகழ்வுப் பணிகள் மீண்டும் நேற்றுக் காலை முதல் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைய நேற்றுடன் 53 ஆவது நாளாக அகழ்வுப் பணிகள் இடம் பெற்றுள்ளன. தற்போது வரை 66 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளமையோடு, அவற்றில் 56 மனித எலும்புக்கூடுகள் வெளியில் எடுக்கப்பட்டுள்ளன.

விசேட சட்ட வைத்திய அதிகாரி ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஷ தலைமையில் இந்த அகழ்வுப் பணிகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது மாகாணசபைத் தேர்தல் முறைக்கான பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளனர். அந்த முறைமைக்கு எந்தத் தொகுதி என்பதை முதலில் அடையாளம் காணவேண்டும். எந்தெந்தத் தொகுதி என தற்போது அறிக்கையும் தயார் செய்துள்ளனர்.

தொகுதி பிரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் காணப்படும் திருத்த சட்டமூலத்தை நாடாளுமன்றம் அங்கீகரிக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தைத் தாண்டி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இதற்குள் செல்லக்கூடிய அதிகாரம் வழங்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் முக்கியமானதொரு வழக்குத் தீர்ப்பும் காணப்படுகின்றது. கடந்த வருடம் டிசெம்பர் மாதம் அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தாமதமடைவது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அந்த வழக்கின் பிரதிவாதிகளாக உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சரும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரும் குறிப்பிடப்பட்டிருந்தனர். நாங்கள் அந்த வழக்கு விசாரணையின்போது ஆஜராகியிருந்தோம்.

அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுத் திருத்தச் சட்டமூலம் கொண்டுவரப்படும்வரை தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தேர்தலை நடத்தமுடியாது என உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பொன்று உள்ளது. தேர்தல் தாமதமடைவது தொடர்பில் அரசே பொறுப்பேற்க வேண்டும்.

பொருள்கோடலின் கீழ் புதிய சட்டம் அமுல்படுத்தப்பபடாது என தற்போது கூறுகின்றனர். எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இந்த நடவடிக்கைகள் அனைத்தும் நிறைவடையும் பட்சத்தில், 2018 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பை எங்களால் அத்தாட்சிப்படுத்த முடியும்.

அப்படியென்றால் இந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் அல்லது அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் ஏற்கனவே கலைக்கப்பட்டுள்ள 3 மாகாணசபைகள் மற்றும் இனிக் கலைக்கப்படவுள்ள 3 மாகாண சபைகளையும் சேர்த்து ஒரே தடவையில் தேர்தலை நடத்தமுடியும். தேவை ஏற்படும் பட்சத்தில் மார்ச் மாதம் பதவிக்காலம் நிறைவடையவுள்ள ஏனைய 2 மாகாணசபைகளையும் இணைத்துக்கொண்டு தேர்தலை நடத்த முடியும். – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir
செவ்வாய்க்கிழமை
21.08.2018



# ஆசிய விளையாட்டு விழா: வாய்ப்பை இழந்தார் மத்யூ




18ஆவது ஆசிய விளையாட்டு விழாவின் முதல் நாளான நேற்று முன் தினம் காலை நடைபெற்ற ஆண்களுக் கான 200 மீற்றர் சாதாரண நீச்சல் போட்டியில் இலங்கை வீரர் மத்யூ அபே சிங்க இறுதிப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பை தவறவிட்டார்.

45 ஆசிய நாடுகள் பங்கேற்றுள்ள ஆசிய விளையாட்டு விழா நேற்றுமுன் தினம் இரவு மிகவும் கோலாகலமான முறையில் ஆரம்பமானது.

இந்த நிலையில், நீர் நிலைப் போட்டி களின் ஆரம்பச் சுற்றுப் போட்டிகள் நேற்று முன் தினம் காலை ஜகார்த்தா விலுள்ள கலேரா பங்கர்னோ விளை யாட்டரங்கின் நீச்சல் தடாகத்தில் ஆரம்ப மாகின.

இதில் இலங்கை அணியின் நட்சத்திர நீச்சல் வீரரான மெத்யூ அபேசிங்க, ஆண்களுக்கான 200 மீற்றர் சாதாரண நீச்சல் போட்டியின் 3ஆவது தகுதிச் சுற்றில் பங்குபற்றியிருந்தார்.

இந்தப்போட்டியை 1:50:97 செக்கன்க ளில் நிறைவுசெய்த மெத்யூ, 6ஆவது இடத்தைப் பெற்றதுடன், ஒட்டுமொத்த நிலையில் 12ஆவது இடத்தைப் பெற்று இறுதிப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பை இழந்தார்.

முன்னதாக கடந்த ஏப்ரல் மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொது நலவாய விளையாட்டு போட்டியில் ஆண் களுக்கான 100 மீற்றர் சாதாரண நீச்சல் போட்டியில் மத்யூ அபேசிங்க, புதிய தேசிய சாதனை படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# எஸ்.எல்.சி. 20/20 இன்று ஆரம்பம்

இலங்கை கிரிக்கெட் இரசிகர்கள் அனை வரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த, எஸ். எல்.சி. 20/20 தொடர், இன்று செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த எஸ்.எல்.சி. 20/20 தொடரை, முதல்முறையாக இலங்கை கிரிக் கெட் சபை நடத்துகின்றது.

இதில் கொழும்பு, கண்டி, தம்புள்ளை மற் றும் காலி என நான்கு அணிகள் விளையாடு கின்றன. இதில் கொழும்பு அணிக்கு தினேஷ் சந்திமால் தலைமை தாங்குகிறார். கண்டி அணிக்கு அஞ்சலோ மத்தியூஸும், தம் புள்ளை அணிக்கு திசர பெரேராவும், காலி அணிக்கு சுரங்க லக்மாலும் தலைமை தாங்குகின்றனர்.




இந்த தொடருக்கு ஒவ்வொரு அணிக்கும் தலா 21 வீரர்கள் என 84 வீரர்கள் கொண்ட ஆரம்பக் கட்ட குழாம்கள் அறிவிக்கப்பட்டுள் ளன.

இலங்கை தேசிய அணியில் இடம்பெற் றுள்ள வீரர்கள், இளம் மற்றும் முதற்தர போட்டிகளில் விளையாடும் வீரர்கள் என பலர் இத்தொடரில் விளையாடுகின்றனர்.

ரவுண்ட் – ரொபின் அடிப்படையில் நடை பெறும் ஆரம்பப் போட்டிகளில் ஒவ்வொரு அணியும் ஆறு போட்டிகளில் விளையாட வுள்ளன. புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும்.

இளம் வீரர்களை இனங்கண்டு அணிக் குள் உள்வாங்குவதும், கடந்த காலங்களில் சோபிக்க தவறியதால் தேசிய அணியிலி ருந்து நீக்கப்பட்ட வீரர்களின் திறமையை மீள பரிசீலித்து மீண்டும் அணிக்குள் உள் வாங்குவதையும் நோக்காகக் கொண்டு இத் தொடர் நடத்தப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது.

# மிச்செல் ஜோன்சன் ஓய்வு




ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச் சாளர் மிச்செல் ஜோன்சன் சர்வதேச போட்டிகள் அனைத்திலிருந்தும் ஓய்வு பெறப்போவதாக அறிவித் துள்ளார்.

டெஸ்ட் ஒரு நாள் மற்றும் ரி -20 போட்டிகளில் இருந்து ஏற்கனவே ஓய்வு பெற்றிருந்த ஜோன்சன் லீக் போட்டிகளில் விளையாடிவந்தார்.

2016-17 பிக்பாஸ்லீக்கில் சிறப்பாக விளையாடிய அவர் பேர்த் ஸ்கோர்ச் சர்ஸ் கிண்ணத்தை கைப்பற்றுவ தற்கு காரணமாகயிருந்தார்.

மேலும் ஜோன்சன் ஐ.பி.எல். போட்டிகளிலும் விளையாடியிருந் தார்.

இந்நிலையில் உடல்உபாதைகள் தொடர்வதன் காரணமாக அனைத்து வகையான சர்வதேசப் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெற தீர்மானித்துள் ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

என்னுடைய விளையாட்டு முடி விற்கு வந்துவிட்டது நான் இறுதிப் பந்தை வீசிவிட்டேன். இன்று எனது இறுதி விக்கெட்டை கைப்பற்றிவிட் டேன். இதனால் அனைத்துவகையான சர்வதேசப்போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுகின்றேன் என அவர் அறிவித்துள்ளார்.

நான் அடுத்த வருடம் வரை லீக் போட்டிகளில் விளையாட எண்ணியி ருந்தேன். ஆனால் எனது உடல் ஒத் துழைக்க மறுக்கின்றது என தெரிவித் துள்ள அவர், இந்த வருட ஐ.பி.எல். போட்டிகளில் உடல் உபாதைகளை எதிர்கொண்டேன். இது நான் முற்றாக ஓய்வு பெறவேண்டும் என்பதற்கான அறிகுறி எனவும் குறிப்பிட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டு நியுசிலாந் திற்கு எதிரான தனது கிரிக்கெட் வாழ்க் கையை ஆரம்பித்த ஜோன்சன் 590 சர்வதேச விக்கெட்களை வீழ்த்தி யுள்ளார்.

313 டெஸ்ட் விக்கெட்களை வீழ்த்தி யுள்ள அவர் 2013 – 14 ஆசஸ் தொட ரில் மிகவும் அற்புதமாக பந்து வீசி 37 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார்.

தனது அதிவேகப்பந்து வீச்சின் காரணமாக 2015 உலகக்கிண்ணத்தை ஆஸ்திரேலியாவிற்கு பெற்றுக் கொடுத்த ஜோன்சன் சிறந்த துடுப் பாட்ட வீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தென்னாபிரிக்க அணிக்கு எதிராக அவர் சதமொன்றைப் பெற்றிருந்தார்.

தற்போது அனைத்தும் முடிவிற்கு வந்துவிட்டது, 2013 -14 ஆசஸ் மற் றும் தென்னாபிரிக்காவில் சதம் பெற் றமை ஆகியனவே எனது நினைவில் உள்ள மிகச்சிறப்பான விடயங்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான் ஏனைய பல வீரர்களை விட உயர்வையும் தாழ்வையும் சந்தி த்துள்ளேன். என்னால் நெருக்க டியான தருணங்களில் எதிர்த்து போராட முடிந்தமை குறித்தும் காயங் களின் பின்னரும் அணிக்காக தொடர்ச்சியாக சிறப்பாக விளையாட முடிந்தது குறித்தும் நான் பெருமைப் படுகின்றேன் என அவர் தெரிவித் துள்ளார்.

# ஒரே இன்னிங்ஸில் 5 கட்ச் பிடித்த ரிஷப் பந்த்

தனது முதல் டெஸ்ட் போட்டியிலேயே 5 கேட்சுகளை பிடித்து அசத்திய இந்திய வீரர் ரிஷப் பந்திற்கு, முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கர் பாராட்டுகளை தெரிவித் துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியின் நேற்று முன்தினம் ஆட்டத்தில், இந்திய அணியின் அபார பந்துவீச்சினால் இங்கிலாந்து அணி 161 ஓட்டங்களில் சுருண்டது.

ஹார்திக் பாண்டியா தனது மிரட்டலான பந்துவீச்சினால், டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் முறையாக 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். அத்துடன் தனது அறி முக டெஸ்டில் விளையாடிய ரிஷப் பந்த் விக்கெட் கீப்பராகச் சிறப்பாகச் செயல்



பட்டார்.

கட்சுகளை பறந்து பறந்து பிடித்த அவர், அறிமுகப் போட்டியிலேயே ஐந்து கட்ச் பிடித்த வீரர்களின் பட்டியலில் இணைந் தார். இந்நிலையில், இந்திய முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர், ஹார் திக் பாண்டியா மற்றும் ரிஷப் பந்த இருவ ரையும் வெகுவாக பாராட்டியுள்ளார்.

# சீற்றமடைந்தார் ஹார்திக் பாண்டியா

விமர்சகர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது பற்றி கவலையில்லை என இந்திய கிரிக்கெட் அணி வீரர் ஹார்திக் பாண்டியா கூறியுள்ளார்.

இந்திய அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வரும் நிலையில் முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் தோல்வியடைந்தது.

மூன்றாவது போட்டி தற்போது நடந்து வரும் நிலை யில் முதல் இன்னிங்சில் இந்தியா 329 ஓட்டங்க ளுக்கு ஆல் அவுட் ஆனது.

இங்கிலாந்து முதல் இன்னிங்சைத் தொடங்கிய நிலையில் 161 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இந்திய அணி சார்பில் ஹார்திக் பாண்டியா 6 ஓவர் கள் வீசி 28 ஓட்டங்களை மட்டும் விட்டு கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஹார்திக் பாண்டியாவை கடந்த இரண்டு நாள் களுக்கு முன்னர் இந்திய அணியின் முன்னாள் வீரர் ஹர்பஜன் சிங் கடுமையாக விமர்சித்திருந்தார்.

சகலதுறை வீரராக பாண்டியா சிறப்பாகச் செயல் படவில்லை, அவரை கபில்தேவுடன் ஒப்பிடுவதை நிறுத்த வேண்டும். ஒரே இரவில் கபில்தேவ் ஆகமுடி யாது எனக் கூறியிருந்தார்.

இதற்கு தனது சிறப்பான ஆட்டம் மூலம் பதில் தந்துள்ள பாண்டியா கூறுகையில், விமர்சகர்களுக் காக நான் விளையாடவில்லை, நாட்டுக்காக விளை யாடுகிறேன். விமர்சகர்கள் எதையாவது பேசுவதற்கு சம்பளம் வாங்குகிறார்கள்.

கபில்தேவுடன் என்னை ஒப்பிடுவதை பற்றி கேட்கிறீர்கள், நானா அவருடன் ஒப்பிடச் சொன்னேன். நான் அவருடன் என்னை ஒப்பிட்டதில்லை. நான் கபில்தேவ் ஆக ஆசைப்பட்டதில்லை. நான் பாண்டி யாவாக இருக்கிறேன். என்னை யாருடனும் ஒப்பிட வேண்டாம் எனக் கூறியுள்ளார்.

(ஐ)

# புரவுப் பெருமக்கள் விருது விழா – 2018



படங்கள்: Photo Sree, கோண்டாவில்

யாழ்ப்பாணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் புரவுப் பெருமக்கள் விருது விழா – 2018 கடந்த 18.08.2018 சனிக்கிழமை அன்று கொக்குவில் செல்வா பலஸில் யாழ்ப்பாணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் பந்துல ஹப்புத்தந்திரிகே தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஐவன் திஸாநாயக்க கலந்து கொண்டார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களை உள்ளடக்கிய வடக்குப் பிராந்தியத்தில் கடந்த 8 ஆண்டுகளாக அதிக இறைவரி செலுத்தும் வர்த்தகராக கஜமுகன் ஹாட்வெயர்ஸ் உரிமையாளர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் அவர்கள் விளங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.08.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.